விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 16 சனிக்கிழமை (02.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இராணுவத் தளபதி இன்று யாழ். விஜயம்

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகிறார். இராணுவ வீரர்கள் தங்கிச் செல்வதற்காக காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள தல் செவன (பனை நிழல்) ஓய்வு விடுதியை திறப்பதற்காகவே அவர் யாழ். வரவுள்ளார்.

காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு அருகில் கடற்கரை ஓரத்தில் இராணுவத்தின் பொறியியலாளர்களினால் இந்த ஓய்வு விடுதி அமைக்கப்பட்டுள்ளது. ஒரு உல்லாசப் பிரயாண ஹோட்டலில் உள்ள சகல வசதிகளையும் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். (ச-5)

# இறுதிப் போரின்போது இடம்பெற்ற படுகொலைக் காட்சி இணையத்தில்!

## 'போருக்குப் பின்னான சாட்சி' அமைப்பு வெளியிட்டது

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட இளைஞன் ஒருவர் தொடர்பான காட்சியைப் போருக்குப் பின்னான சாட்சியங்கள் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

இலங்கையைத் தளமாகக் கொண்டியங்கும் போருக்குப் பின்னான சாட்சியங்கள் என்கிற அமைப்பு கடந்த வருடம் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இலங்கை அரசினால் மனிதப் பேரழிவுகளும் யுத்தக் குற்றங்களும் நடத்தப்பட்டன என்று தீவிரமாக பிரசாரம் செய்து வருகின்றது.

மனிதப் பேரழிவுகள் மற்றும் யுத்தக் குற்றங்கள் ஆகியவற்றுக்கான ஆதாரங்கள் என்று அவ்வப்போது புகைப்படங்கள், வீடியோக் காட்சிகள் ஆகியவற்றை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

படையினரால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளி ஒருவர் கொல்லப்பட்டார் என்பதற் (16 ஆம் பக்கம் பார்க்க)

# கோரிக்கை முன்வைக்கப்பட்டால் மீள் பரிசீலனை செய்ய முடியும்

## ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறைத் தண்டனை தொடர்பில், தன்னிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அது குறித்து மீள் பரிசீலனை செய்ய முடியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொலனறுவையில் பௌத்த பிக்குகளுடனான சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வடகொரியாவிலிருந்து ஆயுதம்

### பேராசிரியர் றொகான் சாட்சியம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வடகொரியா 1997 ஆம் ஆண்டிலிருந்து ஆயுதங்களை விநியோகித்ததாக சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர் பேராசிரியர் றொகான் குணரட்ன கூறியுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கணக்காளரான பொன்னையா ஆனந்தராஜா என்பவர் வடகொரியாவிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகப் பேராசிரியர் றொகான் குணரட்ன கூறினார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ (16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புக் கோர வேண்டுமா? நிராகரித்தார் அனோமா

(கொழும்பு)

சரத் பொன்சேகா மன்னிப்புக் கோர வேண்டும் என்ற கோரிக்கையை அவரது மனைவி அனோமா பொன்சேகா நிராகரித்துள்ளார்.

தனது கணவரின் தண்டனையை நீக்குவதற்கு அரசாங்கம் எதை எதிர்பார்க்கின்றது என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேன்முறையீடு செய்தால் தண்டனையை நீக்குவது பற்றி அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் எனக் கூறியதைக் கருத்தில் கொண்டே அவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்களினால் ஆட்சி செய்ய பாதுகாப்புச் செயலர் முயற்சி

## ★ குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி. ★

(கொழும்பு)

ஆயுதங்களினால் உலகை ஆட்சி செய்ய முடியும் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கருதுகின்றார்.

ஆயுதங்களினால் ஆட்சி நடத்த முயற்சித்த பலர் இறுதியில் குப்பைத் தொட்டிகளில் வீசி எறியப்பட்டுள்ளனர் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மீது பிரயோகித்த அழுத்தங்களும் ஜே.வி.பியினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களுமே சரத் பொன்சேகாவுக்கு இந்தத் தண்டனை வழங்குவதற்கு வழிகோலியது என பாதுகாப்புச் செயலாளர் தேசிய பத்திரிகை ஒன்றுக்குச் செவ்வி அளித்துள்ளதாகவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லயில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்ட தடகளப் போட்டியில் யாழ்ப்பாணத்துக்கு குவியும் தங்கம்

### நேற்றும் இரண்டு தங்கம் வென்றனர்

(கொழும்பு)

தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் வடமாகாண பாடசாலை வீரர்களுக்கு மேலும் இரண்டு தங்கம், ஒரு வெண்கலம் மற்றும் 2 வர்ண விருதுகள் நேற்றுக் கிடைத்துள்ளது.

தேசிய பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் கடந்த புதன்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இதில் நேற்று நடைபெற்ற 17 வயது ஆண்கள் பிரிவு கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீரர் ஏ.ஹொனி றொசான் 3.35 மீற்றர் உயரம் பாய்ந்து முதலிடத்தைப் பிடித்து தங்கம் வென்றார்.

இதன் மூலம் அளவெட்டி அருணோதயா கல்லூரி தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் இவ் வருடம் (16 ஆம் பக்கம் பார்க்க)



வெலிக்கடை சென்று திரும்பிய அனோமா, பத்திரிகையாளர் முன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

"நேற்றைய அனுபவங்களிலிருந்து
நாளைய சாதனைகளை நோக்கி"

MEDIA

# சிகரம் ஊடக இல்ல மாணவர்களின்

சிகரம்
இளையோர் மாதாந்தம்
சஞ்சிகை

யாழ்ப்பாணம் இன்று
வட இலங்கை செய்திகள் பார்வைகள்
www.Jaffnatoday.com

## புதிய ஊடக பயணத்தின் தொடக்கம்

**02-10-2010 சனிக்கிழமை மாலை 3 மணி**
**யாழ் மத்திய கல்லூரிறொமொன் குக் மண்டபம்**

மாணவர்களுடன் இணைந்து உங்களை வரவேற்கும்
கோ.ருஷாங்கன்,
பணிப்பாளர், சிகரம் ஊடக இல்லம்

(C1326)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி நிதி மோசடி செய்த நபர் கைது

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி மாணவர்களிடம் நிதி மோசடி செய்த கணனி நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் யாழ்ப்பாண விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இவர் மூன்று மாணவர்களை லண்டனுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து தலா 5 இலட்சம் ரூபா வீதம் பெற்று போலிச் சான்றிதழ்களை வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட பிரஸ்தாப உரிமையாளர் நேற்று யாழ் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்கப் பட்டார்.

அத்துடன் வெளிநாடுகளுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு மாத இறுதியில் வெள்ளிக்கிழமைகளில் ஹற்றன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பம் இட வேண்டும் எனவும் யாழ் நீதிமன்ற நீதிவான் அ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். (ச-5)

# வலிகாமம் கல்விப் பணிப்பாளராக இராஜேந்திரம் நியமனம்

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக யாழ்.வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.இராஜேந்திரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவிருந்த ப.விக்னேஸ்வரன் வட மாகாண கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றதையடுத்து அங்கு வெற்றிடமாக இருந்த இப் பதவிக்கு யாழ்ப்பாணம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய எம்.இராஜேந்திரம் வடக்கு மாகாண ஆளுனரின் அறிவுறுத்தலுக்கமைய வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் இந் நியமனம் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (ச-5)

# தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியப் பயிற்சி நாளை ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான ஆசிரியப்பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கௌரவ கே.என் டக்ளஸ் தேவானந்தா, மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் இளங்கோவன், தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி சேதர, ஜி.ரி.சற் நிறுவனப் பணிப்பாளர் மஸ்கர், தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தேசிய கல்வி நிறுவக நிறுவன அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்க, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# இன்றும் நாளையும் அரசியல் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

அரசியல் அமைப்பின் பதின்மூன்றாவது திருத்தமும் தமிழர்களும் என்ற பொருளில் அரசியல் ஆய்வாளர் அ.யோதிலிங்கம் நிகழ்த்தும் ஆய்வரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வியாபாரி மூலை சனசமூக நிலையத்திலும், நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 148, டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்துவ மண்டபத்திலும் இடம் பெறும். (ந)

# நல்லூர் பிரதேச சபை

## திருநெல்வேலி சந்தை புனரமைப்பு வேலைக்கான கூலி அடிப்படையிலான ஒப்பந்தகாரருக்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2010

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-7(C8) அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை உடைய பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகிறது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திர கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 04.10.2010 தொடக்கம் 15.10.2010 பி.ப. 3.00 மணிவரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 18.10.2010 நண்பகல் 12.00 மணிவரை.
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 18.10.2010 பி.ப. 2.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'செயலாளர்' நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும். மறு பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்' உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை அலுவலக பிரதான நிறைவேற்று அதிகாரி உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரையகம் இல.8, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | NBT |
|---|---|---|---|---|---|
| 01 | கடைத்தொகுதிக்கான புதிய மாடிக்கட்டடம் | 50000.00 | 500.00 | 60.00 | 15.00 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
01.10.2010

(C-1323)

திரு.மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

செல்லா சினிமா
09.09.2010 முதல்



மம்முட்டி
அர்ஜுன்
சினேகா
மற்றும் பலர்
நடிப்பில்
றம்ழான் பெருநாளை முன்னிட்டு
இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு
வந்தே மாதரம்
அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்
D.இமான் | வெஙன்றி | அரவிந்த்.T.
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

ஸ்ரீ ஜக்கம்மா துணை
ஜோதிடம்
எட்டயாபுரத்தைச் சேர்ந்த ஜோதிடர் எஸ். சந்திரபோஸ் அவர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளார். ஜாதகம், கைரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் அனைத்தும் துல்லியமாக பார்க்கப்படும்.
தொடர்புக்கு: சண்ஜெயா ரெஸ்ரோரண்ட்
மேல்மாடி, ரூம் No.03,
414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0778752163
(C-1312)

யா/மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை
நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும்
மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி
தலைவர் : திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் (கல்லூரி அதிபர்)
இடம் : பண்டத்தரிப்பு பெரியவிளான் சவாரித்திடல்
காலம் : 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 01.00 மணி
முதன்மை விருந்தினர்
உயர்திரு. மாவை சேனாதிராசா அவர்கள்
(கௌரவ பாராளுமன்ற உறுப்பினர். யாழ். மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்
பொறுப்பதிகாரி இளவாலை பொலிஸ் நிலையம்
ஆரம்பிப்பாளர்
திரு.சி.அசோககுமாரன்
(கல்லூரி பழைய மாணவன்)
பிரவேசம் இலவசம்
சவாரிப் பிரியர்கள், காளைச் சொந்தக்காரர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பரிசில்கள்
A பிரிவு - முதலாம் பரிசு தங்கப்பதக்கம்
B.C முதலாம் பரிசு துவிச்சக்கரவண்டி
நூற்றாண்டு விழாச்சபையினர்
யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை
(சி-1324)

# இன்று ஒரு தகவல்

## சனீஸ்வரன்

என்னுடைய நீண்டகால நண்பர் ஒருத்தர் இருந்தார். அவர் வருடந்தோறும் திருநள்ளாறு என்ற திருத்தலத்துக்குப் போவார். "அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"என்ன இது இப்படிக் கேட்கிறீர்கள்? சனி பகவான் நளனின் விருப்பப்படி அங்கே தானே எழுந்தருளியிருக்கிறார். அங்கே போய் வணங்கிவந்தால் நம்மைப் பிடித்திருக்கும் சனியெல்லாம் விலகும்" என்றார்.

அந்த நண்பருக்கு ஆன்மீக விடயங்களில் மிகுந்த ஈடுபாடு. அவ்வப்போது சில புராணக்கதைகள் சொல்வார். மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும்.

எப்பொழுதும் புராண விடயங்களை அறிவியல் என்ற தராசில் வைத்து எடைபோட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

அப்படிப் பார்த்தால் அதெல்லாம் நம்பமுடியாத மூட நம்பிக்கைகளாகத் தோன்றும். புராணங்களை புராணங்களாகவே புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில் தான் இந்த நண்பரும் நிறைய செய்திகளைச் சொல்லுவார்.

"சனியைப் போல கொடுப்பவனுமில்லை. சனியைப் போல கெடுப்பவனும் இல்லை" என்று சோதிடர்கள் சொல்வார்கள். நாம் ஏதாவது வம்பில் மாட்டிக் கொண்டால் 'பிடித்தது சனி' என்கிறோம்.

இராவணன் எப்பேறப்பட்டவீரன், அவனே சனியின் பார்வை பட்டதும் சங்கடப்பட ஆரம்பித்தான் என்றார் நண்பர்.

"அது எப்படி?" என்று கேட்டேன்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்.

"இராவணன், எல்லா நவக்கிரகங்களையும் பிடித்துக் கொண்டு வந்து தன்னுடைய சிம்மாசனத்தில் படிகளாக போட்டு வைத்தானாம். பாவம், அந்த ஒன்பது தேவதைகளும் ஒவ்வொரு படியாக குப்புறக் கிடந்தார்களாம். நவக்கிரகம் நம்மை ஆட்டிப் படைக்கிறது என்று நாம் சொல்கிறோம். ஆனால் அந்த நவக்கிரகங்களை இராவணன் எப்படி வைத்திருந்தான் பாருங்கள். எல்லோரையும் சிம்மாசனத்துக்குப் பக்கத்தில் படிகளாக போட்டு வைத்திருந்தான். வேறுவழியில்லாமல் எல்லோரும் குப்புற விழுந்து கிடந்தார்கள். இராவணன் ஒவ்வொரு தடவையும் இவர்களுடைய முதுகில் அடிவைத்து ஏறித்தான் அந்த சிம்மாசனத்துக்குப் போவது வழக்கம்.

இப்படியே நடந்து கொண்டிருந்தது. இது நாரதரின் கண்ணில் பட்டது. நாரதர் சும்மா இருப்பாரா? யோசித்தார். என்ன செய்யலாம் என்று முடிவு செய்து கொண்டு நேராக இராவணனிடம் போனார்.

"இராவணா? நீ நவக்கிரகங்களைப் பிடித்துக் கொண்டு வந்து உன் சிம்மாசனத்துக்குப் படிகளாகப் போட்டு வைத்திருக்கிறாய். அது உன்னுடைய வீரத்தைக் காட்டுகிறது. ஒரு விடயத்தை நீ யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு தடவை நீ சிம்மாசனத்துக்குப் போகும் போதும் நவக்கிரகங்களின் முதுகில் அடிவைத்து ஏறிப் போகிறாய். அது உனக்குப் பெருமையில்லை. அவர்களுடைய மார்பில் அடிவைத்து ஏறிப்போக வேண்டும். அது தான் உனக்குப் பெருமை" என்றார்.

"இவர் இப்படிச் சொல்வதும் சரிதானே" என்று யோசித்தான் இராவணன்.

உடனே குப்புறக் கிடந்த நவக்கிரகங்களை திருப்பி மல்லாக்கப் போட்டான். அவர்களுடைய மார்பில் அடிவைத்து மேலே ஏறி சிம்மாசனத்துக்குப் போனான்.

அப்படிப் போய்க் கொண்டிருக்கும் போது சனிபகவானின் பார்வை அவன் மேல் பட்டது. அவ்வளவுதான். சூர்ப்பனகை தேடிவந்தாள். சீதையின் அழகைப் பற்றி தன் அண்ணனிடம் சொல்ல ஆரம்பித்தாள். விவகாரம் ஆரம்பமாகிவிட்டது என்று இந்தக் கதையை சொல்லி முடித்தார் என்னுடைய நண்பர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிப்பதற்கு முன் 6728 ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

வரவு -செலவுத்திட்டம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் 6 ஆயிரத்து 728 ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெற்ற 3 ஆயிரம் ஆசிரியர்கள் , 554 ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் 3 ஆயிரத்து 174 அழகியற் கலை ஆசிரியர்கள் என்ற அடிப்படையில் இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆங்கில ஆசிரியர்கள் தேசிய கல்லூரிகளுக்கு நியமிக்கப்படவுள்ளதுடன் இது தொடர்பாக நடத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய ஏனையோரை மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# சமுர்த்தி சிப்தொற புலமைப்பரிசில்

தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களிலிருந்து சமுர்த்தி சிப்தொற புலமைப்பரிசிலுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்றும் விண்ணப்பித்த மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறும் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ-29)

# அமெரிக்க உயரதிகாரிகள் குழுவினர் யாழ்ப்பாணம் விஜயம்

அமெரிக்காவிலிருந்து கைத்தொழில் அபிவிருத்தி சம்மந்தமான உயரதிகாரிகள் 70 பேர் கொண்ட குழுவினர் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இதுகுறித்த கலந்துரையாடல் நேற்றுக்காலை 7.30 மணிக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்க ராஜா, பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) ரி.உமாகாந்தன் மற்றும் ஏனைய உயரதிகாரிகள் கலந்து கொண்டார். (ஸ்ரீ)

# இராசி பலன்

02.10.2010
(புரட்டாதி 16, சனிக்கிழமை)
நவமி பிற்பகல் 2.38 மணிவரை
புநர்பூசம் பிற்பகல் 3.51 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
மூன்றாம் புரட்டாதிச் சனி

**மேடம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வரும், தூரதேசச் செய்திகள் வந்து சேரும், பிரயாணம் நன்மை தரும்.

**இடபம்** தைரியத்தோடு செயற்பட்டு காரியம் வெல்லும் நாள், கௌரவம், அந்தஸ்து உயரும், உடன் பிறப்புக்கள் உள்ளம் மகிழும் செய்தியொன்றைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

**மிதுனம்** இனிய செய்தி இல்லம் தேடி வரும் நாள், நிலையான வருமானத்திற்கு வழிசமைக்கும் நாள், குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், சுபசெலவுகளைச் செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்** வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம், சிந்தனை மிகுதியுண்டு.

**சிங்கம்** உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், சுப செலவுகளைச் செய்து கொள்வீர்கள்.

**கன்னி** செல்வநிலை உயரும் நாள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம். பண வரவு இருமடங்காகும். விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** முத்தான வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்,தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்கள் முன்வருவர்.

**விருச்சிகம்** பொது வாழ்வில் புகழ் கூடும். புத்திரர் வழியில் சில நன்மைகள் ஏற்படலாம், மகிழ்ச்சி தரும் விதத்தில் தொலைபேசித் தகவல் வந்து சேரும்.

**தனுசு** மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகாணலாம், பிரயாணத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நிலையுண்டு.

**மகரம்** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியடையும் நாள், பிரயாண நன்மையுண்டு, தேக நலன் சீராக காணப்படும்.

**கும்பம்** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், தொழில் வளர்ச்சி ஏற்படும், வருமானம் திருப்தி தரும், பூர்வ புண்ணிய கருமங்களில் அதிக ஈடுபாடு காணப்படும்.

வளவன்

# நிறைகுறைவான பாண் விற்ற பேக்கரி மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பாவனையாளர் அதிகார சபையினால் நேற்று முன்தினம் யாழ். வர்த்தக நிலையங்கள் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதில் கோப்பாய் , அச்சுவேலி , கல்வியங்காடு , புத்தூர் மற்றும் நீர்வேலி போன்ற பிரதேசங்களே மேற்படி சோதனைக்குட்படுத்தப்பட்டன.


இதில் பாணின் நிறையை குறைத்து விற்பனை செய்தமைக்காக பேக்கரி ஒன்றின் மீதும் தராசு படியில் முத்திரை பொறிக்கப்படாதவற்றை வைத்து விற்பனை செய்தமைக்காக ஏழு வர்த்தக நிறுவணங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாவனையாளர் அதிகாரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4-6)

# மின்தடைபற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை குருநகர் , நாவாந்துறை , கொட்டடி, யாழ்ப்பட்டணப் பகுதி மற்றும் பிறவுண் வீதி, காங்கேசன் துறை வீதி , மானிப்பாய் வீதி, சிவன்பண்ணை வீதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 75 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 60 | 40 | 90 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 60-70 | 75 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 120 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 30 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 70 |
| பயற்றங்காய் | 120 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 30 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 40 | 70 |
| முருங்கைக்காய் | 120 | -- | 90 |
| போஞ்சி | 120 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 15 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-40 | 35 |



ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் வாழ்வாதார சுயதொழிலை மேம்படுத்தும் முகமாக தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளிகளில் முதற்கட்டமாக 10 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் திட்ட இணைப்பாளர் எஸ்.திருக்குமரன் ஆகியோர் உரையாற்றுவதையும், தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன், சாவகச்சேரிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளின் தரம் 6 முதல் 11 வரையுள்ள மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாக சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

✠✠✠

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் விசேட கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மேற்குறித்த ஆசிரியர்களை இச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

## கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார 2ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வாரம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை கைதடி சாந்தி நிலையத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இல்ல அத்தியட்சகர் என். இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணத்தின் யாழ். கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.குகநேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். முகுந்தன், சாவகச்சேரி பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.வரதபாஸ்கரன், கைதடி தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் செ. பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் வரவேற்புரையை சாந்தி நிலைய பரிசாரகர் சு.வண்ணமயில் வழங்கவுள்ளதுடன் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், கைதடி மின்னொளி சனசமூக நிலையத்தினால் ''அரைப் பரியாரியார்'' நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வரையறுக்கப்பட்ட யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவராக க.இலங்கநாதன், உபதலைவராக செ.ஜெயக்குமார், செயலாளராக ப.பரார்தனன், பொருளாளராக இ.பாக்கியநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக வை.மாணிக்கம், பா.சசிகுமார், சு. நாகேந்திரன், ம.ஜெயந்தன், தா. இராஜேந்திரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

## 'ஜீவநதி' வெள்ளிமலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜீவநதி மூன்றாவது ஆண்டு வெள்ளிமலர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள கலை அகத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை அதிபர் மா.நவநீதமணி, சிரேஷ்ட விரிவுரையாளர் க.திலகநாதன், எழுத்தாளர் சி.ரவீந்திரன், சிரேஷ்ட விரிவுரையாளர் பா. தனபாலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் நூல் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், வெளியீட்டுரையை அருட்திரு தமிழ்நேசன் அடிகளார், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கி.விசாகரூபன், எழுத்தாளர் மேமன்கவி ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-4)




## பறவைக் காய்ச்சலுக்கெதிரான தடுப்பு மருந்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பறவைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக பறவைக் காய்ச்சல் நோய்க்கு எதிரான தடை மருந்து உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இத்தடை மருந்து பறவைகள், மிருகங்கள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு வழங்கப்படவுள்ளதுடன் பண்ணையாளர்கள் இத்தடை மருந்தை ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இதற்காக அவ்வப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் அல்லது உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## கராத்தே போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்று சாதனை



வடமாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட கராத்தே சண்டைப் போட்டியிலும் காட்டா போட்டிகளிலும் செல்வி கோணேசப்பிள்ளை பிரசாந்தினி தங்கப் பதக்கத்தைப்பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

மேலும் இன்பர் சிட்டி காண்டீபன் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட கராத்தே சண்டை, காட்டா போட்டிகளிலும் இவர் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ஸ்ரீ-4)

## பின்தங்கிய நிலையிலுள்ள எமது கிராமத்தை அபிவிருத்தி செய்ய யாராவது முன்வருவார்களா?

### J/363 கிராம அலுவலர் பிரிவு மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

கரவெட்டி J/363 கிராமசேவையாளர் பிரிவிலுள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களான இராஜகிராமம், கன்பொல்லை, ஸ்ரீநகர், கவுடாதை, பிராமணன் தோட்டம் ஆகிய கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இக்கிராமங்களில் 462 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 650 பேர் வசித்து வருகின்றனர்.

கிராம மக்களில் அதிகமானோர் கூலித் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். இவ் அனை வருக்கும் 5பொதுக் கிணறுகளும் 5 மலசல கூடங்களும் மட்டுமே உள்ளன. இக்கிராமங் களில் கல்வி தரம் மற்றும் ஏனைய வசதிகள் மிகவும் பின் தங்கிய நிலையிலே காணப் படுகின்றன.

வறுமையாலும் அடிப்படை வசதியின்மையாலும் கல்வித்தரம் இன்மை போன்ற காரணங்களுக்காகவும் அக்கிராமங்களின் மக்களில் அதிகமானோர் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகின்றனர். இக்கிராமங்களில் மக்களின் வாழ்வாதாரம், கல்வித்தரம், அடிப்படை வசதிகள் அனைத்தும் அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டும் என்றும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப் பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-24)

## மீண்டும் மூடப்பட்டுள்ள தொண்டைமானாற்றுப் பாலம்

### மக்கள் பெரும் அசௌகரியம்

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு பாலம் மீண்டும் மூடப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பாலம் செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு மக்கள் போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்டதாகவும் மஹோற்சவம் முடிவடைந்து சில தினங்களில் பூட்டப்பட்டு விட்டதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த 24 வருடங்களாக பூட்டியிருந்த இப்பாலம் மஹோற்சவத்தை முன்னிட்டு திறந்துவிடப்பட்ட போதிலும் ஒரு சில தினங்களில் மீண்டும் மூடப்பட்டுள்ளமை மிகவும் கவலை அளிப்பதாகவும் இலகுவான போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தற்போது நாட்டில் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் இப்பாலம் முழுமையாக திறக்கப்படாது காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் இப்பாலத்தை திறப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-52)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு தலா 10ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)


பருத்தித்துறை, பொலிகண்டி பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மின்சார சபையினால் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கை விசாரித்த நீதவான், சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியான மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மின்சார சபைக்கு நஷ்ட ஈடாக தலா 5 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-4-24)

# தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வை வழங்க அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உரிய அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை வழங்குவதற்கு அரசாங்கம் அக்கறை செலுத்த வில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றிலோ அல்லது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையிலோ தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்ற நோக்கம் நிறைவேற்றப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் உரிய முறையில் மீள் குடியேற்றப்படவில்லை எனவும் மீள் குடியேறுவதற்குத் தேவையான பிரதான காரணியான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வில்லை என்றும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

நலன்புரி நிலைய மக்களின் பிரதிநிதிகளையும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ள வேண்டியது அவ சியம் என்ற போதிலும் அரசாங்கம் அதனை உதாசீனம் செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்கள் வெளியிடப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வெள்ளை வானில் கடத்தப்படுவோம் என்ற அச்சம் காரணமாக ஊடகவியலாளர்கள் தங்களது சுதந்திரமான கருத்துக்களை வெளியிடுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஐக்கிய நாடுகளுக்கு விஜயம் செய்த இலங்கை இராஜதந்திர குழு நியூயோர்க்கில் எவ்வாறு நடந்து கொண்டது. ஐக்கிய நாடுகள் அமைப்பில் இலங்கைக்கு கிடைக்கப் பெற்ற மரியாதை ஆகியன தொடர்பில் இலங்கை ஊடகங்கள் இருட்டடிப்பு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பண மற்றும் அதிகார பலத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் விலைக்கு வாங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாடாளுமன்றமோ, நீதிமன்றமோ, ஊடகங்களோ ஒத்துழைப்பு வழங்காது எனவும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க மக்களே களமிறங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க மண்டபத்தில் அரசியல் அமைப்பு திருத்தங்கள் தொடர்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட போது ரணில் விக் ரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழ் இலக்கிய விழா இரண்டாம் நாள் நிகழ்வு

(கொழும்புத்துறை)

வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவலர்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்படும் தமிழ் இலக்கிய விழா -2010 இரண்டாம் நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் மங்களம்மாள் மாசிலாமணி அரங்கில், திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆய்வரங்கில் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ், திருமதி க.தாமரைச் செல்வி றமீஸ் அப்துல்லா மற்றும்திருமதி அன்னலட்சுமி இராசதுரை ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2-51)

# போதைப்பொருள் பாவனை காரணமாகவே நாட்டில் பெரும்பாலானோர் உயிரிழப்பு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனை காரணமாகவே நாட்டு மக்களின் பெரும் பாலானோர் நோய்வாய்ப்பட்டு மரணிப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கு கொண்டு உரையாற்றும் போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோரின் சிகிச்சைக்காக செலவிடப்படும் பணத்தால் நாட்டின் அபிவிருத்திக்கு பாதகம் ஏற்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(ஸ்ரீ-2)

# அடுத்த ஆண்டுக்கான மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதிகோர முடியாது

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான மாவட்ட அபிவிருத்திக்கான நிதிகளை கோர முடியாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மாவட்டங்களுக்காக திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னரே அடுத்த வேலைத்திட்டங்களுக்கான பணம் ஒதுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அறிவுறுத்தி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மனமார்ந்த நன்றிகள்



எமது புதல்வன் செல்வன்

சி.கீதப்பிரியசர்மா

(உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்)

2010 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகள் பெற்றுச் சித்தி அடைந்தமையைப் பாராட்டியும், அவருக்கு கடந்த 12.09.2010 இல் தென்னிந்திய சிதம்பரம் சிவஸ்ரீ பரமேஸ்வர தீக்ஷிதர் அவர்களுடைய இல்லத்தில் உபநயன பிரம்மோபதேச விழா நடைபெற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்தும் எம்மை மகிழ்வித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா
(கோப்பாய் – சிவம்)
ஸ்ரீமதி சி. விஜயலக்ஷ்மி.

(2584)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



கடந்த 03.09.2010 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவன்

அமரர் மரியன் இரத்தினம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்துநடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

(2582)

யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.

## பதவி வெற்றிடங்கள்

**இளைஞர் யுவதிகளே!**
**A/L எழுதிவிட்டுக் காத்திருக்கின்ற மாணவர்களே!**
**வாழ்க்கைப் பயணத்தில் வெற்றிச் சிகரத்தை அடைய ஓர் அரிய சந்தர்ப்பம்.**

யூனியன் அஷ்யூரன்ஸின் மாபெரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்
பதவி வெற்றிடங்கள் எம்மிடம்
நிரப்ப நீங்கள் தயாரா?.....
இதோ!....... யாழ் பிரதான கிளையில்

பதவி 5 சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி 4 தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
பதவி 3 சிரேஷ்ட தனிப்பட்ட நிதி ஆலோசகர் → பதவி 2 தனிப்பட்ட நிதி ஆலோசகர்
பதவி 1 காப்புறுதி ஆலோசகர்

மோட்டார் சைக்கிள்



கையடக்கத் தொலைபேசி



வாகன கடன்வசதி



வெளிநாட்டு சுற்றுலாப் பயணம்



கணனி வசதி



வீட்டு கடன் வசதி



**தகைமைகள்**

* க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்கள் சித்தி.
* காப்புறுதி துறையில் /சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் (கட்டாயம் அல்ல)
* வன்னியில் இருந்து மீள் குடியமர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமை

**தகைமையுடன் நாம் எதிர்பார்ப்பது**


இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
திடசித்தம், உழைக்கும் விருப்பம்
தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் : 04.10.2010
நேரம் : 09 மணி
இடம்: யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- A.அன்ரன் (விற்பனை முகாமையாளர்)
0773422716, 0212223753

(2549)

# சுற்றுச் சூழலைக் கற்றுத் தரும் ஐங்கரநேசனின் ஏழாவது ஊழி




ஐங்கரநேசன் அவர்களது எழுத்துக்கள் விஞ்ஞான ரீதியான தகவல்களை அழகிய தமிழில் பாமரமக்களும் விளங்கக்கூடியதாக அமைபவை. இதனை கற்கும் பாடசாலை மாணவர்கள் தாமாகவே சிறந்த கட்டுரையாளர்களாகவும் சிறந்த சிந்தனையாளர்களாகவும் சிறந்த சமூக சேவையாளர்களாகவும் உருவாக முடியும். இது எனது அனுபவ உண்மையாகும்.

ஏழாவது ஊழி எனும் நூல் சுற்றுச்சூழலானது எவ்வாறு மனிதன் அறிந்தும் அறியாதும் செய்யும் செயல்களால் பாதிக்கப்படுகின்றது என்பது பற்றியும் அவை சீர் செய்யாத பட்சத்தில் உலகம் மீண்டும் ஒரு தடவை அழிவுக்கு உட்படலாம் எனக் கூறுகின்றது. எனவே சுற்றுச் சூழல் தொடர்பாக நாம் ஆரம்பிக்க வேண்டிய நற்கருமங்களை பற்றி அதாவது எமக்கு உள்ள பொறுப்புக்கள் பற்றி இந்நூல் வாசகர்களிடையே ஒரு எழுச்சியினை ஏற்படுத்துகின்றது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பில் நாம் 5 விடயங்களை உள்ளடக்கல் வேண்டும். அவையாவன.

1.அரசியல் அர்ப்பணிப்பு (Political commitment)

2. சுற்றுச் சூழல் தொடர்பான சூற்றுச்சுழல் பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்கல் (Policy making)

3.சுற்றுச்சூழல் பாதுகாப்பு கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் (Implementation)

4.சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்பாடுகளை மேற்பார்வையிடல் (Monitoring)

5.சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை மதிப்பிடல் (Evaluation)

ஏழாவது ஊழி எனும் நூலில் சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இவற்றில் எமது பிரதேசத்தில் ஏற்படும் பாதிப்புகளை நாங்கள் விழிப்புடன் செயற்படுவதால் குறைவடையச் செய்யலாம். உலக அளவில் ஏற்படும் பாதிப்புகளை நாம் விஞ்ஞான ஆய்வுகளின் மூலமோ சர்வதேச ஒத்துழைப்பின் மூலமோ குறைக்கலாம்.

## நூல் விமர்சனம்

சுற்றுச்சூழல் பாதிப்பில் மிகவும் முக்கியமானது பூமி வெப்பமடைதலாகும். இதனை குறைக்க நாம் அநாவசியமாக செய்யும் சில நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் வேண்டும். உதாரணமாக காடழித்தல் தவிர்க்கப்பட்டு புதிய தாவரங்கள் பிரதியிடப்படல் அவசியம். வாகனப்பாவனைகளை குறைத்து பொது வாகனப் பாவனை அல்லது மிதிவண்டிகளை உபயோகித்தல் வேண்டும். பூமிக்கு அதிகம் காபனீர் ஒட்சைட்டை எடுத்து ஒட்சிசனைத் தரும் பிளாங்கன் என்னும் கடலின் ஒரு கல அல்காவில் உயிர்மூலக்கூற்றுத் தொழில் நுட்பம் மூலம் குறைந்தது 10 மடங்கு அதிகமாக ஒளித்தொகுப்பு வீதத்தினை அதிகரிக்க கூடிய அல்காக்களை நாம் உருவாக்கி பாக்கு நீரிணையில் பயன்படுத்துவோமாயின் புவி வெப்பமடைதலில் 25% இனை கட்டுப்படுத்தும் ஆற்றலை நாம் பெற்று விடுவோம். இது இந்திய - அமெரிக்க விஞ்ஞானிகளிற்குச் சமர்ப்பணம். அடுத்து எமது எரிபொருட்பாவனையை குறைத்தல் வேண்டும். எரிபொருட் பாவனைக்கு அதனை அகழ்தல் பற்றி சர்வதேசச் சட்டம் OPEC இற்கு பதிலாக உருவாக்கப்படல் வேண்டும்.

இந்நூலில் சூறாவளியின் தாக்கம் பற்றியும் அது சுற்றுச்சூழல் பாதிப்பினால் ஏற்பட்ட விளைவு எனவும் அதன் அழிவுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஆனால் எமது எதிர்கால விஞ்ஞானிகளால் ஏவுகணைகளினால் இயக்கப்படும் காற்றினை வெற்றிடமாக்கும் குண்டினால் சூறாவளி புயல் மையத்தினை அழிக்க முடியும். இதனால் சூறாவளியின் தாக்கத்தினை நிறுத்த முடியும். இது தொடர்பான கணித மாதிரியினை நான் ஐக்கிய அமெரிக்கக் கடற்படை அதிகாரிகளிற்கு 2007ஆம் ஆண்டு பங்களாதேஷ் இல் உள்ள Westin Hotel இல் விளக்கமளித்துள்ளேன்.

அடுத்து ஓசோன் ஓட்டையினை அளவிடும் அலகு டொப்சன் இல் சூழல் பாதிப்பு அளவிடப்படுகின்றது. உலகில் ஓசோனின் அளவில் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மொன்றியல் உடன்படிக்கை பற்றி கூறப்பட்டு உள்ளது. ஓசோன் தொடர்பாக ஏற்பட்ட வெற்றியினைப் போல் சூழல் வெப்பமடைதலுக்கு எதிராகவும் நாம் உலகில் பொதுக் கருத்தினை உருவாக்கல் வேண்டும்.

சூழலினை அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் மாசடையாது இருக்க விடுதலைச் சூழலியல் என்ற கட்டுரை விளக்குகின்றது. இனங்கள் எவ்வாறு அழிகின்றது என்பதை வாழைஇனம், சிங்கம், புலி என்பவற்றின் அழிவுகளில் இருந்தும் உலகில் பல மொழிகளின் அழிவு பற்றி அதாவது வேற்று மொழியினை கற்கும் போது அல்லது கற்பிக்கும் போது தாய்மொழி அழியும் சூழல் ஏற்படுகின்றது என்பதனை ஆணித்தரமாக எடுத்துக் கூறுகின்றார். இது இலங்கைத் தமிழருக்கு சாலவும் பொருந்தும். அதாவது சிங்களவர்கள் தமிழைக்கற்பதனால் சிங்களம் அழியாது. ஆனால் தமிழர்கள் சிங்களத்தினை கற்பதனால் தமிழ் அழியும் என்பதனை விடுதலைச் சூழலியலில் இருந்து உய்த்து உணரக் கூடியதாக உள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் எமது பிரதேசம் சார்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை தவிர்த்தல் மிகவும் முக்கியமானது. பிளாஸ்ரிக் போத்தலில் நீரினைச் சேகரிக்கும் வழக்கம் எம்மிடையே பெருகிவருகின்றன. இதனால் ஆபத்து ஏற்படலாம் என ஏழாவது ஊழி ஆசிரியர் ஆதாரபூர்வமாக எடுத்துக் கூறுகிறார். மேலும் பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதனால் புற்றுநோயினை ஏற்படுத்தும் நச்சுப் பொருட்கள் பாதிப்பினை ஏற்படுத்தும் என ஆதார பூர்வமாக கூறப்பட்டு உள்ளது. எனவே நாம் பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை இயன்றளவு குறைத்தல் வேண்டும். மேலும் சுற்றுச் சூழல் நட்பு மிக்க பிளாஸ்ரிக் பைகளை பாவனையில் ஈடுபடுத்த வேண்டும். பங்களாதேஷில் எவ்வாறு பிளாஸ்ரிக் தடைசெய்யப்பட்டதோ அவ்வாறே எமது நாட்டிலும் பிளாஸ்டிக் பாவனையை ஓரம்கட்ட காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அடுத்து அஸ்பெஸ்ரஸ் ஆல் ஏற்படும் ஆபத்து. ரெஃலான் பாத்திரங்களினால் ஏற்படும் ஆபத்து, நீல நிற காற்சட்டையினால் ஏற்படும் ஆபத்து, ஒலி அலைகளினால் ஏற்படும் ஆபத்து விளக்கமாக கூறப்பட்டுள்ளன.

கைத்தொலைபேசிகளினால் மூளைப் புற்றுநோயும் மனஅழுத்தமும் ஏற்படும் என்பதனை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தொலைத்தொடர்பு கோபுரங்களாலும் சூழல் பாதிக்கப்படுகின்றது.

ஒருவர் ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் கைத்தொலைபேசி பாவிப்பாராயின் ஆண்டுக்கு 364 மணித்தியாலம் கைத் தொலைபேசி பாவிப்பதாயின் அதனை ஒரு அலகாக கொண்டால் (1 Unit of David de Pomeral) அதிக அளவு David de Pomeral Unit உடையவர்களிற்கு புற்று நோய், மன நோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம். அடுத்து பாவனைக்கு உதவாத கைத்தொலைபேசிகளும் சூழல் மாசிற்கு ஏதுவானது.

அடுத்து மென்பானங்களின் நச்சுத் தன்மையினை எடுத்துக்கூறி "நீர்சுருக்கி, நெய் உருக்கி, மோர் பெருக்கி உண்பவர் தம் பேருரைக்கப் போமே பிணி" எனும் சித்தர் பாடல் மூலம் எமது பாரம்பரிய நீராகாரமான மோரின் பெருமையினைக் கூறுகின்றார். இவ்வாறு பல கோணங்களில் சூழலியலை ஆராயும் நூல் ஆசிரியர் ஐங்கரநேசன் வரலாறு தொடர்பிலும் முக்கிய விடயங்களை முன்வைத்துள்ளார்.

இறுதியாக சூழலியல் என்பது ஒரு ஏட்டுக்கல்வியல்ல என்பதனையும் ஆய்வு கூடத்தில் மட்டும் கற்கும் பாடம் அல்ல என்பதனையும் பல்கலைக்கழக புலமைசார் அறிஞர்களின் கூற்றுக்கள் மட்டுமல்ல என்பதனையும் களத்தரிப்புடன் காலத்துட னான அவதானிப்பு இன்றியமையாதது என்பதனையும் ஏழாவது ஊழி எனும் நூல் எமக்கு எடுத்தியம்புகின்றது.

டாக்டர் சி.யமுனாநந்தா

# நீதவானை அவமதித்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் இடை நிறுத்தம்

(கொழும்பு)

போக்குவரத்து பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் நீதவான் ஒருவரை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டதையடுத்து சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிப்பிட்ட போக்குவரத்துத்துறை பொலிஸ் சார்ஜன்ட் ஹற்றன் நகரில் மீன் விற்பனை செய்த வாகனமொன்றுக்கு அருகில் மோசமான வார்த்தைப் பிரயோகத்தினை மேற்கொண்ட வேளையில் அப்போது அவ்விடத்தில் நீதவான் ஒருவர் இருப்பது குறித்து ஒருவர் குறிப்பிட்ட சார்ஜன்டிடம் கூறியுள்ளார்.

அதனை அலட்சியப்படுத்திய அந்த சார்ஜன்ட் நீதவானை அவமதிக்கும் வகையில் அவ்வார்த்தைப் பிரயோகம் செய்துள்ளார்.

இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட நீதவான் பொலிஸ் உயரதிகாரிக்கு அறிவித்ததைத் தொடர்ந்து தற்போது அந்த பொலிஸ் சார்ஜன்ட் தற்காலிகமாக சேவையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட நீதவான் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த வலப்பனை நீதிமன்ற நீதவான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# போலியான வங்கியட்டைகளை பயன்படுத்தி நிதி மோசடி!

## கனடாவில் இலங்கைத்தமிழர் கைது

போலியான வங்கி அட்டைகளைப் பயன்படுத்த நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்தார் என்று குற்றஞ்சாட்டி இலங்கை தமிழர் ஒருவர் கனடாவில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோகுலன் கனகரட்ணம் (வயது 26) என்பவரே கைது செய்யப்பட்டிருப்பவர் ஆவார். வங்கியில் பொருத்தப்பட்டிருந்த கமரா இவரைத் துல்லியமாகக் காட்டிக்கொடுத்துள்ளது.

இதேவேளை இம்மோசடிகளோடு சம்பந்தப்பட்ட 10 குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளதுடன் இம் மோசடி நடவடிக்கைளால் எத்தனை பேர் பாதிக்கப் பட்டிருக்கின்றார்கள்? ,என்பது இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை. இவர் ஒன்ராரியோ நகரவாசி ஆவார். இவரோடு கைது செய்யப்பட்ட இன்னொருவரைப் போதிய ஆதாரங்கள் இல்லாமையால் பொலிஸார் விடுதலை செய்துள்ளனர். (ஸ்ரீ)







மக்கள் வங்கியின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறுவர் தினம் மற்றும் புலமைப்பரிசில் பரிசளிப்பு விழா அண்மையில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ்.உதவிப்பிராந்திய முகாமையாளர் என்.நாகேஸ்வரன், மூத்த பத்திரிகையாளர் சச்சிதானந்தம் ஆகியோர் மாணவிகளுக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு அவுஸ்திரேலியா தீர்மானம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளில் அதிகளவானோரின் விண்ணப்பங்களை நிராகரிப்பதென அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தென்படுகிறது.

இந்த நாடுகளைச் சேர்ந்த சிறுபான்மைக் குழுக்கள் துன்புறுத்தல்களுக்குள்ளாகும் அபாயம் குறைவாக இருப்பதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் நம்புவதாக கசிய விடப்பட்ட ஆவ ணங்கள் மூலம் அறிய வருவதாக த அவுஸ்திரேலியன் பத்திரிகை நேற்று முன்தினம் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை புகலிடம் கோருவோர் என சந்தேகிக்கப்படும் 18 பேருடன் படகொன்று கடந்த புதன்கிழமை இரவு அஸ்மோர் தீவுகளுக்கு வடபகுதியில் வைத்து அவுஸ்திரேலிய கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இது இந்த வருடம் அவுஸ்திரேலியாவுக்கு வந்தடைந்துள்ள 97ஆவது படகாகும். இதுவரை படகுகள் மூலம் 4ஆயிரத்து 612 பேர் அவுஸ்திரேலியாவுக்கு வருகை தந்துள்ளனர்.

கொள்கை நிலைப்பாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கசிந்து இருக்கும் அறிக்கையில் புகலிடம் கோருவார் என அதாவது இன அடிப்படையில் புகலிடம் கோருவோர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் படுவதாக தெரிவிக்கப்படுபவற்றில் பாரதூரமான சந்தேகங்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களை பொறுத்தவரையில் துன்புறுத்தலுக்கு இலக்காகுவது இப்போது குறைந்த அளவிலேயே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அகதிகளில் விண்ணப்பங்களை பரிசீலிப்பதை அவுஸ்திரேலியா முடக்கி வைத்திருந்த நிலையில் இப்போது அவற்றை பரிசீலிப்பதற்கான நடவடிக்கையை அந்நாட்டு அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது.

(ஸ்ரீ-2)

# தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து போராட்டம்

## தேசிய தொழிற்சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அடிப்படை கோரிக்கைகள் இரண்டை முன்வைத்து தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய தொழிற்சங்கம் தயாராகிவருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சங்கத்தின் தலைவருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள வேதன கொடுப்பனவுகளை இல்லாமல் செய்வதும் எதிர்வரும் 2011ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டயோசனையில் சேவையாளர்களின் வேதனம் 8 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதுமே அக்கோரிக்கைகளாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மருதானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# ரஞ்சன் ராமநாயக்க சமர்ப்பித்த முன்பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

பிரபல நடிகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன் பிணை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கட்டுகஸ்தொட்டைப் பிரதேச பாடசாலையொன்றைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்க இந்த முன் பிணை மனுவை முன்வைத்துள்ளார்.

தம்மைத் திருமணம் செய்வதாக தெரிவித்து ஒரு மில்லியன் ரூபாவினை ரஞ்சன் ராமநாயக்க மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை வழக்கு விசாரணைகளின் போது ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை என கூறப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# ஐ.தே.க வாக்காளர்களின் உரிமைகளை பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சிகின்றது

## ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு நகர ஐக்கிய தேசியக் கட்சி வாக்காளர்களின் உரிமைகளை பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் ஓர் கட்டமாகவே கொழும்பு மாநகரசபையை அதிகாரசபையாக மாற்று வதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் அதேவேளையில் அபிவிருத்தி என்ற போர்வையில் கொழும்பு மாநகரசபையை சட்ட விரோதமான முறையில் கைப்பற்றுவதற்கு முனைப்பு காட்டப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த வருமானம் ஈட்டி வரும் மக்களின் குடியிருப்புகளை அழித்து அந்த இடங்களை பல்தேசிய கம்பனிகளுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மக்களின் உரிமைகளை முடக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# 02.10.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 1187 - 88 ஆண்டுகள் சிலுவைப் போரின் பின்னர் எகிப்திய சுல்தான் சலாதீன் ஜெருசலேமைக் கைப்பற்றினான்.
- 1263 - நோர்வேக்கும் ஸ்கொட்லாந்துக்கும் இடையே லார்க்ஸ் என்ற இடத்தில் போர் இடம்பெற்றது.
- 1535 - ஜாக் கார்ட்டியே மொண்ட்றியாலைக் கண்டுபிடித்தார்.
- 1870 - ரோம் மீண்டும் இத்தாலியுடன் இணைவதற்கு ஆதரவாக மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்தனர்.
- 1903 - யாழ்ப்பாணத்தில் Jaffna Steam Navigation Company என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான "SS Jaffna" என்ற பயணிகள் கப்பல் தனது வெள்ளோட்டத்தை ஆரம்பித்தது.
- 1935 - இத்தாலி அபிசீனியாவைக் கைப்பற்றியது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜெர்மனிப் படைகள் மொஸ்கோவுக்கு எதிரான தமது மூன்று மாதத் தாக்குதலை ஆரம்பித்தன.
- 1946 - பல்கேரியா கம்யூனிஸ்டுகளின் வசமாகியது.
- 1958 - கினி பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1968 - மெக்சிகோவில் இடம்பெற்ற மாணவர்களின் அமைதிப் போராட்டத்தின் முடிவில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1990 - சீனாவின் போயிங் விமானம் கடத்தப்பட்ட பின்னர் அது குவாங்சூ விமானநிலையத்தில் தரையிறங்கும் போது தரையில் நின்ற இரு விமானங்களுடன் மோதியதில் 132 பேர் கொல்லப்பட்டனர்.
- 1992 - பிரேசிலில் சிறைக்கைதிகளின் போராட்டம் ஒன்றின் போது 111 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1996 - பெருவில் விமானம் ஒன்று பசிபிக் பெருங்கடலில் வீழ்ந்ததில் 70 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - நியூயோர்க்கில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - பென்சில்வேனியாவில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் 5 மாணவிகள் கொல்லப்பட்டனர்.


## பிறப்புக்கள்

- 1800 -நாட் டர்னர் அமெரிக்க அடிமைக் கிளர்ச்சித் தலைவர் (இ.1831)
- 1904- லால் பகதூர் சாஸ்திரி இந்தியப் பிரதமர் (இ.1966)
- 1925- ஆன் றணசிங்க ஆங்கிலேயே யூதப் பெண் எழுத்தாளர்
- 1965- டொம் மூடி அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்

## இறப்புகள்

- 1906 - ராஜா ரவி வர்மா, இந்தியாவின் பிரபல ஓவியர் (பி. 1848)
- 1975 - காமராஜர், இந்திய அரசியல் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் (பி. 1903)
- 1980 - சேர் ஜோன் கொத்தலாவல, இலங்கை அரசியல் தலைவர்

**1869 - மகாத்மா காந்தி பிறந்த நாள், (இறப்பு. 1948)**



# ஈழத்தவர் வரலாறு

53


## 8.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

பிலிப்தே ஒலிவேறா, முன் கூறியபடி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலையிடித்து அக்கோயிற் கற்களைக் கொண்டு, கோட்டையும் வீடுகளும் கட்டினான். யாழ்ப்பாணத்திலிருந்த சைவ, வைணவ ஆலயங்கள் எல்லாவற்றையும் தரை மட்டமாக இடிப்பித்தான். இதையறிந்த கோயிலதிகாரிகளும் அர்ச்சகர்களும் தத்தம் கோயில் விக்கிரங்களைக் கிணறுகளிலுங் குளங்களிலும் போட்டு மறைத்தார்கள்.

கீரிமலையிலிருந்த திருத்தம்பலேஸ்வரன் கோயிலை அவர்கள் இடிக்குமுன்னே, விக்கிரகங்களை அக்கோயில் குருக்களாகிய பரசுபாணி ஐயர் ஒரு கிணற்றிலிட்டு மண்ணால் தூர்த்துவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினர். நல்லூர் கந்தசுவாமி கோயிலை இடிக்குமுன் அதன் மெய்க்காப்பாளனாயிருந்த சங்கிலியென்னும் சைவப்பண்டாரம், அக்கோயில் விதானங்கள் வரையப்பட்ட செப்பேடு, செப்புச் சாதனங்களையும் கொண்டு மட்டக்களப்புக்கோடினான். அங்கிருந்து சிலவிக்கிரகங்கள் தாமிர விக்கிரகங்களையெல்லாம் அக்கோயில் குருக்கள்மார் பூதராயர் கோயிலுக்கு சமீபத்திலுள்ள குளத்திலே புதைத்துவிட்டு நீர்வேலிப்பகுதிக் கோடினர்.




பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைந்திருந்த விட்த்தில் அமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் (முத்திரைச்சந்தி)

#### கந்தமடாலயம்

கி.பி.1620 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசமாகியது. போர்த்துக்கேய தனியரசாட்சியில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தையே மக்கள் அனைவரும் கைக்கொள்ள வேண்டுமென போர்த்துக்கேய ஆட்சியாளர் வற்புறுத்தினர்.

'சைவமத வணக்கம் செய்யப்படாதென்றும் பூசை முதலியன அனுட்டிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்களென்றும் கட்டளை பிறப்பித்ததுமன்றி ஒற்றர்கள் வைத்தும் ஆராயப்பட்டது. ஆனால் அந்தரங்கமாகத் தங்கள் தெய்வங்களைவழிபடுவதையும், சைவ ஆசாரங்களையுஞ் சனங்கள் கைவிட்டாரல்லர். தங்கள் தங்கள் வீட்டுச் சார்களிலும், வளவுகளிலும், மரத்தடியிலும், ஒவ்வோர் அடையாளங்களை வைத்து வழிபட்டு வந்தனர். விரத காலத்தில் சாப்பிட்டு இலைகளைக் கூரைகளிலும் வேலிகளிலும் மறைவாக ஒளித்துச் செருகிவந்தனர். ஒவ்வொருவருஞ் சிலுவையடையாளமணிய வேண்டுமென்றுங் கட்டளை பிறந்தது. உலோகங்களால் செய்யப்பட்ட சிலுவைகளை அணிவதற்குச் சனங்கள் நாணித் தங்கள் தலைப்பாகைகளைச் சிலுவை ரூபமாகக் கட்டி வந்தனர். போர்த்துக்கேயப் பறங்கியர் சைவாலயங்களைப் பாழாக்கிய பின் பெரும்பாலும், அக் கோயில்களிருந்த விடங்களிலேயே, தங்கள் கோயில்களை கட்டினர்.



கந்தவேள், தெய்வயானை, வள்ளி சிலா விக்கிரகங்கள் - நல்லூர்

நல்லூரில் யமுனாரிக்கருகே விளங்கும் கிறிஸ்தவ கோயிலிருக்குமிடம் ஒலிவேறாவால் இடிக்கப்பட்ட புராதன கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டிருந்தவிடமே.

எனவே, போர்த்துக்கேயர் காலத்தில், நல்லூரில் இடிக்கப்பட்டழிந்த கந்தசுவாமி கோயில் விளங்கியவிடத்தில், கத்தோலிக்க தேவாலயம் ஒன்றமைக்கப்பட்டது. முதலில் இந்தத் தேவாலயம் களிமண்ணாலும் பனையோலையாலுமமைக்கப்பட்டது.

கி.பி.1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் ஒல்லாந்தர் வசமாகியது. அவர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலத்திலிருந்து, தமது புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் தீவிரமாகவிருந்தனர். மக்களைக் கத்தோலிக்க சமயத்தினின்றும் திருப்ப முயன்றனர். முன்பிருந்த கத்தோலிக்க கோயில்களை இடித்தும், சிலவிடத்தும் புதுக்கியுந்திருத்தியும் தமது மதத் தேவாலயங்கள் ஆக்கினர்.

'ஒல்லாந்தர் தங்கள் அரசாட்சியின் பிற்கூற்றில் சமய விடயமாக கொண்ட வன்கண்மையைக் குறைத்துக் கொண்டனர்' அதனால் சைவசமயிகள் தமது ஆசாரங் களையும், வழிபாடுகளையும் பயமின்றிக் கைக்கொண்டொழுகத் தொடங்கினர். 'நல்லூ ரில் வாழ்ந்த சைவசமயிகள் பலர் கந்தசுவாமி கோயில் இருந்தவிடத்திற்கு வந்து வழிபாடியற்றினர்.

போர்த்துக்கேயப் பறங்கியர்களால் இடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகரின் சந்ததியோராகிய பிராமணர் சிலர், இக்கோயிலின் வழிபாட்டை மீளவும் ஆரம்பிக்கக் காரணமாக இருந்தார்கள் என அறியப்படுகிறது. கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணோத்தமர் ஒருவர், புராதன கந்த சுவாமி கோயில் இருந்தவிடத்திற்கு அண்மை யில், மடாலயம் ஒன்றினை நிறுவி வேலினைப் பிரதிஷ்டைசெய்து வழிபாடியற்றக் காரணமாக இருந்தார் என அறியப்படுகின்றது. (தொடரும்)

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆசிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

## உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

2012ஆம் ஆண்டு முதல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆசிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தில் ஈடுபட்டுள்ள உயர் கல்வி அமைச்சர், அந்தநாட்டு மனித வள அபிவிருத்தி அமைச்சர் கபில்சிவாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இந்த கருத்தை வெளியிட்டார்.

2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் 200 ஆசிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் வருடாந்தம் வழங்கப்படவுள்ள புலமைப்பரிசில்களில் 40 வீதம் இந்திய மாணவர்களுக்காக ஒதுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையே மாணவர்கள் பரிமாற்றத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கையாக இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கு இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதுடன் இந்தியா- இலங்கை இருநாடுகளினதும் கல்வித் துறையில் ஒத்துழைப்பை விஸ்தரிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் உயர்கல்வி கட்டமைப்பை நவீன மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# பரிசளிப்பு விழா

(அல்வாய்)

அச்சுவேலி மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் அதிபர்.வி.பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிபதி எஸ். தியாகேந்திரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் ரி.ரவீந்திரதாஸ், அச்சுவேலி கொமர்ஷல் வங்கி முகாமையாளர் விவேகானந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி சிவானந்தி தியாகேந்திரன் பரிசில் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ச-3)



தெல்லிப்பழை கிழக்கு பாரதி முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தெல்லிப்பழை கிழக்கு சமூர்த்தி உத்தியோகத்தர் க.தங்கவடிவேல் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.ஐ.வி.வீரசிங்க விளையாட்டை ஆரம்பித்து வைப்பதையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன் வெற்றிபெற்ற மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணியில் பிற கட்சிகள் இணைக்கப்படுமா?

## தேர்தலுக்கு 7 மாதங்களே உள்ள நிலையில் களத்தில் அ.தி.மு.க. முன்னேறுகின்றது

"தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில் பிற கட்சிகளை இணைப்பது பற்றி சட்டமன்றத் தேர்தல் நெருங்கும்போதுதான் முடிவு செய்வோம். அதனையும் காங்கிரஸ் கட்சியுடன் கலந்து பேசியே முடிவெடுப்போம். இப்போதைய கூட்டணியே



வலிமையானது" என்று திருச்சியில் முதல்வர் கலைஞர் தெரிவித்தார்.

இதுவரை எந்த அரசும் சாதிக்காத சாதனைகளை அவருடைய அரசு சாதித்திருக்கிறது. தங்கள் கைகளில் கிடைக்கும் ஒரு கவளம் சோற்றில்தான் ஏழை எளிய மக்கள் இறைவனைக் காண்கிறார்கள். அதேபோல அரசு செயல்படுத்தும் ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியிலிருந்து முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மகளிருக்கு திருமண உதவி, நூறு நாள் வேலைத் திட்டம் என்று செயல்படுத்தப்படும் எல்லா திட்டங்களுமே மக்களின் கரங்களை எட்டியிருக்கின்றன. எனவே இன்றுவரை தி.மு.க.அரசு மீது பொதுமக்களுக்கு அதிருப்தியில்லை. அரசுக்கு எதிரான விமர்சனங்கள் மக்கள் மன்றத்தில் எழவில்லை. வந்திருப்பது வசந்தம் அல்ல, வாடைக் காற்று என்று சுவாசக்கோளாறுள்ளவர்கள் மட்டும் முகம் சுழிக்கிறார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பு இடம் பெற்றது. வட மாவட்டங்களில் பா.ம.க.இல்லாத குறையை நிறைவு செய்தது. எனவே, அ.தி.மு.க. அணியில் அங்கம் பெற்ற பா.ம.க.விற்கு ஒரே ஒரு இடம் கூட கிடைக்கவில்லை.

ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொங்குச் சீமையில் தி.மு.கழகம் வெற்றி பெறவில்லை. அதற்கு முந்தைய சட்டமன்றத் தேர்தலிலும் பெரிய வெற்றியைப் பெற்றது என்று கூற முடியாது.

கொங்கு வேளாள சமுதாயத்தைப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் இணைத்தது, இன்றைய முதல்வர் கலைஞர்தான். குறைந்த பட்சம் ஒரு ஏக்கர் நிலம், ஒரு பம்ப்செட் என்று நிலத்தில் இறங்கிப் பாடுபடுகிறவர்கள் அந்தச் சமுதாய மக்கள். இலவச மின்சாரத் திட்டம் இன்றுவரை அவர்களுக்குப் பேருதவியாக இருக்கிறது. இம்முறை ஆட்சிபீடம் ஏறிய பின்னர் விவசாயிகளின் 7ஆயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்தவரும் கலைஞர்தான். இவ்வளவு பெரிய அனுகூலங்களை அவர்கள் வேறு எவருடைய ஆட்சியிலும் பெற்றதில்லை. ஆனாலும் கொங்குச் சீமையில் தி.மு.கழகம் வெற்றிபெறவில்லை. என்ன காரணம்?

தனது மைந்தனின் முன்னேற்றத்திற்காகவே வடமாவட்டங்களில் ஒரு ஜாதியின் பெயரால் ஒருவர் இயக்கம் நடத்தும்போது நாம் ஏன் சமூக அடிப்படையில் இணையக்கூடாது என்று கொங்கு வேளாளர் தன வந்தர்கள் பகிரங்கமாகவே விவாதித்தனர். அந்த வேகத்தில் அவர்களும் ஓர் முன்னேற்றக் கழகம் கண்டனர். உணர்வுகளைத் தட்டி எழுப்பினர். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர். வெற்றி பெறவில்லையென்றாலும் தி.மு.கழகத்தின் வெற்றிக்குப் பங்கம் ஏற்படுத்த முடிந்தது.

தொண்டாமுத்தூர் தொகுதி இடைத்தேர்தலில் அந்த முன்னேற்றக் கழகம் போட்டியிட்டபோது அதன் வேகம் குறைந்துவிட்டது. கொங்கு சமுதாய மக்கள் தங்கள் தங்கள் அரசியல் உணர்விற்கு ஏற்ப தங்கள் கட்சிகளுக்கு வாக்களித்தனர்.

*1980* - களில் நாராயணசாமி நாயுடுவின் விவசாய சங்கம்தான் தேர்தலில் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. அந்த சங்கத்தைக் கண்டு அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆரே ஆச்சரியப்பட்டார். நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு அறைகூவல் விட்டார். கூட்டணி வெற்றி பெற்றது. ஆனால் சட்ட மன்றத் தேர்தல் வந்தபோது அதே விவசாயிகள் தங்கள் தங்கள் அரசியல் கட்சிகளுக்கே வாக்களித்தனர். ஜாதிச் செல்வாக்கு, தொடர்ந்து தேர்தல் தீர்ப்புகளை தீர்மானிக்க முடியாது.

கொங்குச் சீமையில் தி.மு.கழகம் பலவீனம் அடைந்ததற்கு அந்தச் சமுதாய முன்னேற்றக் கழகம்தான் காரணமா? இல்லை. கழக அமைப்புச் செயல்பாடுகளில் அதனை இயக்கும் முன்னோடிகளின் செயல்பாடுகளில் மக்கள் ஏதோகுறை காண்கிறார்கள்; கோபம் கொள்கிறார்கள். மீண்டும் தேர்தல் களத்தில் இறங்குவதற்கு முன்னர் அந்தக் குறைபாடுகள் களையப்படவேண்டும் என்கிறார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னால் பேரவை சண்முகத்தை தி.மு.கழகம் அனுப்பி வைத்தது. கொங்குச் சீமையில் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவிற்கு என்ன காரணம் என்று அவரும் ஆராய்ந்தார். அவர் தந்த அறிக்கை அறிவாலயத்தில் பத்திரமாக இருக்கக்கூடும். புரட்டிப் பார்ப்பது நல்லது என்று கொங்கு மாவட்ட கழக முன்னோடிகள் கருதுகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டத்தையும் கொங்குச் சீமையில் இணைத்தே பார்க்க வேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பழனி, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிகளில் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் தி.மு.கழகம் வெற்றி பெற்றது. வேடசந்தூர் (கரூர் தொகுதி), திண்டுக்கல் தொகுதிகளில் ஏழாயிரம், எட்டாயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தது. ஆத்தூர், நிலக்கோட்டை தொகுதிகள்தான் இழப்பை ஈடு செய்தன.

பொதுவாக திண்டுக்கல் மாவட்டத்தில் கொங்கு சமுதாய மக்கள் முப்பது சதவிகிதத்திற்கும்



அதிகமாக இருக்கிறார்கள். வேடசந்தூர், ஆத்தூர் தொகுதிகளில் ஒக்கலிக்க சமுதாயத்தினரும் கணிசமாக இருக்கிறார்கள்.

கோவை மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ஆறு சட்ட மன்றத் தொகுதிகளிலும், பொள்ளாச்சி மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ஐந்து சட்டமன்றத் தொகுதிகளிலும், திருப்பூர் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ஐந்து சட்டமன்றத் தொகுதிகளிலும், ஈரோடு மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ஐந்து சட்டமன்றத் தொகுதிகளிலும் அ.தி.மு.க.கூட்டணிதான் வெற்றி பெற்றிருக்கிறது. இதனை தி.மு.கழகம் அபாய அறிவிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

கொங்குச் சீமை மக்கள் ஏன் கிரீடம் சூட்டாமல் விலங்கு பூட்டுகிறார்கள்? எண்ணிப்பார்க்க வேண்டாமா? சட்டமன்றத் தொகுதி வாரியாகப் பார்த்தால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில்



75 தொகுதிகளில் அண்ணா தி.மு.கழக கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது. அதில் கணிசமான தொகுதிகள் கொங்கு மண்டலத்தில்தான் குடிகொண்டிருக்கின்றன. எனவே, பலவீனங்களைப் பலமாக்கிக் கொள்கின்ற அவசரப் பணிகளும் தேவை. கூட்டணியில் சேர்த்துக்கொள்ள இன்னும் ஏதாவது நேச சக்திகள் இருக்கின்றனவா என்ற ஆலோசனையும் தேவை.

வடமாவட்டங்களைப் பொறுத்த வரையில் இன்றைய தி.மு.க.-காங்கிரஸ்-விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணியே வெற்றிக் கூட்டணிதான். நாடாளுமன்றத் தேர்தல் அதனை மெய்ப்பித்திருக்கிறது. தங்கள் கட்சி அங்கம் பெறும் கூட்டணிதான் வெற்றி பெறும் என்று ஒரு கட்சி உருவாக்கியிருக்கும் மாயையை தேர்தல் தீர்ப்பு உடைத்தெறிந்துவிட்டது.

ஆனாலும் சட்டமன்றத் தேர்தல் என்னும் போது பா.ம.க. நினைவிற்கு வரும். ஆனால், அந்தக் கட்சி இன்னும் தெளிவான ஓர் நிலைக்கு வரவில்லை. பென்னாகரம் இடைத்தேர்தலின்போது மைந்தனுக்கு ராஜ்யசபா சீட்டுக்


**நக்கீரன்**

கேட்டு கலைஞருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டனர். ஆனால், அடுத்த சில தினங்களிலேயே தேர்தலுக்குப் பின்னர் தி.மு.க.வை ஒழிப்பதுதான் முதல்வேலை என்றனர். என்ன? தொலைபேசியில் தொனித்த குரலுக்கும் இப்போதைய அறிவிப்பிற்கும் சம்பந்தமில்லையே என்றார் கலைஞர்.

*11 ஆம் பக்கம் பார்க்க....*

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்

12-VI



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**கழுத்தழுகல் நோய் (Collar rot)**

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

மிளகாய்ப் பயிரில் பாதிப்பை ஏற்படுத்தும் நோய்களுள் பூஞ்சணங்களினாலும் பக்றீரியாவினாலும் ஏற்படுத்தப்படும் நோய்களைப் பற்றி விபரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்நோய்களை விளைநிலத்தில் உருவாக்குவதற்கான காரணிகளைப் பற்றியும் அவற்றிற்கு அனுசரணையாயிருக்கும் சூழல் காரணிகளைப் பற்றியும் மேலும் எவ்வாறு முகாமைத்துவம் செய்வது பற்றியும் இங்கே ஆராய்ந்து பார்த்துமிருக்கிறோம். இயன்றவரை வருமுன் காப்பது என்பது நோய்களைப் பொறுத்தவரையில் அவசியமானது. இதனை இதை வாசிக்கும் அன்பு நெஞ்சங்கள் எங்களூர் விவசாயப் பெருமக்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

மிளகாய்ப் பரியில் ஏற்படும் கழுத்தழுகல் நோய் முக்கியமானது. இந்நோய் சொலனேசியே (Solanaceae) குடும்ப பயிர்களுக்கு ஒரு தலையிடியாகவும் குறித்த சில வேளைகளில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடுகின்றது. எனவே இந்நோயைப் பற்றி இவ்வாறான பயிர்களை பயிர் செய்யும் விவசாயிகள் என்றுமே விழிப்புடன் இருக்கவேண்டும். நன்றாகவே பயிர்கள் வளர்ந்து வருவது போன்று தெரியும். ஆனால் திடுதிப்பென்று மிளகாய் செடிகள் வாடத் தொடங்கும். வாடல் எனும்போது இதற்கு முதல் நாம் ஆராய்ந்த பியூசேரியம் எனும் பூஞ்சணமும் றல்சோனியா என்னும் பக்றீரியாவும் எம் கண்முன்னே வந்தாலும் இங்கே இன்னொரு பூஞ்சணத்தினால் கழுத்துப் பகுதியில் அழுகலேற்பட்டு நீர் பரிமாற்றம் தடைப்படுவதால் வாடல் ஏற்படத் தொடங்குகிறது என்பதை அவதானிக்கலாம்.


**பூஞ்சணம் - ஸ்கிளிரோட்டியம்**

கழுத்தழுகல் நோயை ஏற்படுத்தும் பூஞ்சணம் ஸ்கிளிரோட்டியம் (Sclerotium rolfsii) றொல்ப்சி வகைக்குரியது. இப் பூஞ்சணம் சாதாரணமாக மண்ணில் வாழ்வது. ஆனால் அதற்கு ஏற்ற சூழல் காரணிகள் கிடைக்கும் போது பயிர்களில் தொற்றுஏற்படுத்தி பெருகி சேதத்தை ஏற்படுத்தி விடும் வல்லமை கொண்டது.

இப் பூஞ்சண வகை உண்மையான வித்திகளை உருவாக்குவன அல்ல. அதனால் இப்பூஞ்சணத்தினது இழைகள் நெருக்கமாகி பின்னிப் பிணைந்து ஒரு பந்துபோல உருவாகியிருக்கும். உருவத்தில் கடுகுபோல இருக்கும் இவ் இலிங்கமில் வித்திகள் ஆண்டாண்டு காலமாக மண்ணினுள் வாழக்கூடிய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். இவ்வித்திகளை ஸ்கிளிரோசியா என அழைப்பர். இங்கே அவதானித்து பார்த்தீர்களாயின் பூஞ்சணம் எதுவாயினும் தனக்கு கிடைக்கும் சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப தானும் தமது சந்ததியும் தப்பித்து வாழ தேவையான இன விருத்திக்கான வழிகளனைத்தையும் பயன்படுத்திக் கொள்ளும்.

இந்த வகையிலேயே இப்பூஞ்சணம் தனது பூஞ்சண இழைகளினுதவியுடனும் இலிங்கமில் வித்தியான ஸ்கிளிரோசியா (Sclerotia)வினது உதவியுடனும் பல்கிப் பெருகிக் கிடைக்கும். அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி பயிர்களில் தொற்று ஏற்படுத்தி நோயை தீவிரமாக்கிவிடும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




**காற்றின்றிய சுவாசம் பூஞ்சணத்திற்கு அனுகூலமானது**

கழுத்தழுகல் நோயானது பயிரின் கழுத்துப் பகுதியான நிலத்தின் மேற்பகுதியுடனான பகுதியிலேயே காணப்படும். நிலத்தினுள்ளே நீர் தேங்கி முழுமையாக ஊறியிருக்கும் போது சகதியாயிருக்கும் இச்சூழ்நிலையில் நடைபெறும் காற்றின்றிய சுவாசத்தினால் நிலக்கீழான பயரின் வேர்ப்பகுதி சுவாசிப்பதற்கான ஒட்சிசனினளவு குறைவடையும். இவ்வாறான சூழ்நிலையில் வேர்த் தொகுதியிலுள்ள வேர் மயிர்கள் சுவாசிக்க முடியாது இறக்கத் தொடங்கும். இந்த நிலையே பயிரினளவு ஆரம்பமாகும் எனக் கொள்ளலாம். பயிரொன்றின் வேர்த் தொகுதியில் வேர்களெனப்படுபவை பயிரினை சரியவிடாது நிமிர்ந்து நிற்க கொடுக்கும் விசையாக, பலமாக இருக்குமே தவிர நுண்ணிய இளமையான வேர் மயிர்களே நீர் மற்றும் கனியுப்புக்களை அகத்துறிஞ்ச தேவையானவையாகும். (தொடரும்)

# இத்தாலியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் இருவர் பலி

இத்தாலியில் உள்ள மொடினா நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

இந்த விபத்தில் ப்லியான இருவரும் ஏனைய நான்கு பேருடன் காரில் பயணித்துக்கொண்டிருந்த போது, குறித்த காரின் சாரதியால் காரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது போனதால் நீர்த்தாங்கி ஒன்றுடன் கார்மோதி விபத்துக்குள்ளானது.

வென்னப்புவவை சேர்ந்த டிஸ்ன ஹெலென் சஞ்ஜீவனி (வயது 29),லுணுவிலுவைச் சேர்ந்த அஜித் ரஞ்சன் சுரேஸ் பெர்னாண்டோ (வயது 34) ஆகியோரே இந்த விபத்தில் பலியானவர்கள் ஆவர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை அல்லது நான்காம் திகதியில் இருவரின் சடலங்களையும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை இத்தாலியில் உள்ள உறவினர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுடன் பயணித்த ஏனையோர் ஆபத்தான நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# பொன்சேகாவை விடுவிக்கக்கோரி நாடு முழுவதிலும் போராட்டம்

**ஐ.தே.க.அறிவிப்பு**

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி நாடு முழுவதிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. இப் போராட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொம்பே பிரதேச பௌத்த விஹாரையில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய சரத்பொன்சேகாவிற்கு நல்லாசி வேண்டி ஐக்கிய தேசியக் கட்சி பௌத்த விஹாரைகளில் போதி பூஜைகளையும் செத் கவி பாராயணங்களையும் நடத்தவுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மனிதாபிமான அடிப்படையில் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட தண்டனையை தடுத்திருக்க வேண்டுமெனவும் யுத்த நீதிமன்றத்தின் தீர்ப்பை ஜனாதிபதி அங்கீகரித்தமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தீர்ப்பிற்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் எடுக்கப்படக் கூடிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து தண்டனை வழங்கப்பட்ட போதிலும் மோசடிகளில் ஈடுபட்டமைக்கான போதியளவு சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகா மன்னிப்புக் கோரினால் தண்டனையை தளர்த்துவது குறித்து கவனம் செலுத்தப்படும்

**பாதுகாப்புச் செயலாளர் அறிவிப்பு**

(கொழும்பு)


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சரத்பொன்சேகா மன்னிப்புக் கோரினால் தண்டனையை தளர்த்துவது குறித்து கவனம் செலுத்தமுடியும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தீர்ப்பு அரசியல் அழுத்தங்களுக்காக மாற்றிக் கொள்ளப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சரத்பொன்சேகாவிற்கு விதிக்கப்பட்ட தண்டனை அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படவில்லை என்பதுடன் மூன்றாம் தரப்பினரின் அழுத்தங்களின் மூலமாகவோ அல்ல போராட்டங்களின் மூலமாகவோ சரத் பொன்சேகாவிற்கு விடுதலை பெற்றுக்கொடுக்க முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகாவிற்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு எதிரான போராட்டங்களை நடத்தப்போவதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ள நிலையில், பாதுகாப்புச் செயலாளர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய கூட்டங்களில் அரசாங்கத்திற்கு எதிராக கருத்துகளை வெளியிடுவதன் மூலம் சரத்பொன்சேகா விடுதலை செய்யப்படமாட்டார் என பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.



சர்வதேச அனைத்துப் பாராளுமன்ற ஒன்றிய மாநாட்டில் எதிர்க்கட்சியின் சார்பில் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

ஆளும் கட்சியின் சார்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# கிளிநொச்சியில் சீனித்தொழிற்சாலை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சியில் சீனித் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட உள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதவிர வடமாகாணத்தில் மேலும் பல சீனித் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் தென்னை, தேயிலை போன்ற உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சிறுவர்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்காக அனைவரும் செயற்படுவது அவசியமாகும்

## ஜனாதிபதி வலியுறுத்தல்



(கொழும்பு)

சிறுவர்களுக்குச் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு பெரியோர் உட்பட அனைவரும் செயற்படுவது அவசியமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவிக்கிறார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய உணர்ச்சி பூர்வமான சிந்தனைகளுடன் செயற்படுவதன் மூலம் சமூகத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் துன்புறுத்தல்கள் மற்றும் உரிமை மீறல்கள் குறைவடையுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னரைப் போலன்றி சமாதானம் உருவாகியுள்ள இந்தத் தருணத்தில் அபிவி ருத்தியை நோக்கிய பாதையில் நாடு காலடி பதித்துள்ள நிலையில் உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுகிறது.

பூரணத்துவமான சிறுவர் சந்ததியை உருவாக்குவதே நாட்டின் சுபீட்சமான எதிர் காலத்திற்கு முதற்படியாகும்.

இந்தப் பொறுப்பை முறையாக அடையாளம் கண்டுள்ள தற்போதைய அரசாங்கம் கருவிலிள்ள குழந்தையிலிருந்து முதியவர்கள் வரை உடல் உள மற்றும் ஆன்மீக ரீதியில் ஆளுமை அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதிப்படுத்த ஏனையவர்களை விட அதிக நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சவால்களை வெற்றிகொள்ள அனைவரும் தயார் நிலையில்

## அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய நிலையில் நாட்டின் அனைவரும் தற்போது இருப்பதாக நீர் வழங்கல் துறை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாதுக்கவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால சந்ததியினர் தமது எதிர்காலத்தை வெற்றி கொள்வதற்கு தாங்களும் பங்காளிகளாக இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கு சகல மக்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அமெரிக்க அரச சார்பற்ற நிறுவனம் குறித்து புலனாய்வு பிரிவினர் விசாரணை

அமெரிக்காவைச் சேர்ந்த அஹிம்சை வழி சமாதானப் படையணி என்ற அரச சார்பற்ற நிறுவனம் இலங்கை படையினருக்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அரச சார்பற்ற அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் ஊடக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென சிங்கள ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

இந்த அரச சார்பற்ற அமைப்பின் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் அறிவித்துள்ளதாக சிரேஷ்ட பாதுகாப்புத்துறை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அஹிம்சை வழி சமாதானப் படையணி கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைத் திரட்டியுள்ளனர்.

இந்த அமைப்பைச் சேர்ந்த மூன்று பேர் ஏற்கனவே நாடு கடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலங்கையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்ள ஜப்பான் இணக்கம்

உலகில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இலங்கை மிகவும் முக்கிய தளமாக விளங்குவதாகவும் அது இப்போது உலகின் நேரடி முதலீடுகளைக் கவர்ந்திழுக்கின்றது என்றும் இலங்கை வந்துள்ள ஜப்பானியக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஜப்பான் பாராளுமன்ற நட்புறவு சங்கத் தூதுக்குழுவொன்று கடந்த புதன்கிழமை காலை பிரதமர் தி.மு.ஜயரத்னவை விசும்பாயவிலுள்ள அவ ரது அலுவலகத்தில் வைத்து சந்தித்து உரையாடியபோதே இக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்ள ஜப்பான் அரசாங்கம் விரும்புவதாகவும் அதற்கான சாதகமான பின்னணி உருவாக்கப்படவேண்டும் எனவும் இத்தூதுக்குழுவினர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

உள்நாட்டு யுத்த காலத்தில் ஜப்பான் அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக்கொண்ட பிரதமர் கொரியாவும் ஈரானும் இலங்கை நேரடி முதலீடுகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதையும் சுட்டிக் காட்டினார். (ஸ்ரீ-2)

# பாராளுமன்ற பேரவைக்காக அஸ்வர், சுவாமிநாதன் பரிந்துரை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் ஆகியோரின் பெயர்கள் பாராளுமன்ற பேரவைக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் டி.எம். ஜயரட்னவின் பிரதிநிதியாக அஸ்வரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதியாக எம். சுவாமிநாதனும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவரினால் அனுப்பி வைக்கப்பட்ட பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் சமால் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசன சபைக்கு பதிலீடாக 18 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் கீழ் ஐந்து பேரைக்கொண்ட பாராளுமன்றப் பேரவை உருவாக்கப்படவுள்ளது. பரிந்துரை செய்யப்பட்டுள்ள இரண்டு உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க் கட்சித்தலைவர் ஆகியோர் பாராளுமன்றப் பேரவையில் அங்கம் வகிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றப் பேரவையினால் ஏழு சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட வுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. மனித உரிமை இலஞ்ச ஊழல் தவிர்ப்பு தேர்தல் உள்ளிட்ட நாட்டின் முக்கியமான ஏழு துறைகள் தொடர்பில் இந்தக் ஆணைக் குழுக்கள் நட வடிக்கை மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை நியமனத்தை நிராகரிக்கும் நபர்களையே தாம் நியமிக்கப்போவதாக ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையிலேயே தமது முதல் பிரதிநிதியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை எதிர்க் கட்சித் தலைவர் நியமித்திருந்தார்.

எனினும் தற்போது திடீரென தமது கட்சியைச் சேர்ந்த தேசியப் பட்டியல் உறுப்பினரின் பெயரை அவர் பரிந்துரை செய்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரசியல்வாதிகளிடம் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

நாட்டு மக்களுக்காக வலுவான அரசாங்கம் ஒன்றை உருவாக்கியுள்ள இந்த தருணத்தில் நாட்டின் எதிர்காலம் அரசியல்வாதிகளிடம் தங்கியுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மன்னம்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தப் பொறுப்புகளை உரிய வகையில் முன்னெடுத்து செல்வதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில்.....

9ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆங்காரப் பேரலைகளாய் அவசர நிலை (எமர்ஜென்சி) காலத்தில் ஏவப்பட்ட அடக்குமுறைகளே தி.மு.கழக்தை அசைத்துப் பார்க்க முடியவில்லை. புழுதிக் காற்றா பாட்டிப் போட்டுவிடும்.

அடுத்துவரும் சட்ட மன்றத் தேர்தல் வரை தி.மு.க.அணியில் இருப்பதாக முதல்வருக்கு பா.ம.க. கடிதம் எழுதியது. ராஜ்யசபா சீட்டு இல்லை என்றதும் எந்த அணியிலும் பா.ம.க. இல்லை என்று அறிவித்தார்கள். அடுத்து காங்கிரஸ் தனி அணி அமைக்க வேண்டும் என்று டெல்லிக்குச் சென்று வந்தனர். அந்த அணியில் விஜயகாந்தின் தே.மு.தி.க அங்கம் பெற்றாலும் பா.ம.க.வும் அங்கம் பெறும் என்றனர். அடுத்து அ.தி.மு.க. அணியில் பா.ம.க.இடம் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்றனர். சமூக நீதிக் கட்சிகளை அழைத்து அணி அமைப்போம் என்றனர். மீண்டும் காங்கிரஸ் கட்சியின் கதவுகளைத் தட்டினர். காங்கிரஸ் கட்சி குளிக்கப் போகிறேன் என்று சேற்றைப் பூசிக்கொள்ளுமா? எனவே, தமது தலைமையிலேயே மூன்றாவது அணி அமையும் என்று பா.ம.க. நிறுவுனர் கடைசியாக அறிவித்திருக்கிறார்.

இது இன்றைய நிலவரம்தான். தேர்தலுக்கு இன்னும் ஏழு மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் பா.ம.க. அரங்கிலிருந்து கூட்டணி பற்றி அவ்வப்போது புதிய புதிய இராகங்கள் கேட்கும். எனவேதான் தேர்தல் நெருக்கத்தில்தான் எந்தெந்தக் கட்சிகளை அணியில் இணைக்க முடியும் என்பதனை ஆராய்வோம் என்கிறார் கலைஞர்.
முத்துக் களைத்தான் மகுடத்தில் பதிக்க முடியும்.
நாடாளுமன்றக் கள நிலைமை வேறாக இருக்கும். சட்டமன்றக் கள நிலைமை வேறாக இருக்கும். அதனை உணர்ந்து இப்போதே வாக்குச்சாவடி வாரியாக களப் பணிக் குழுக்களை அ.தி.மு.கழகம் அமைத்து முடித்துவிட்டது.
"கூடுமானவரை புதிய முகங்களைக் களத்தில் இறக்க வேண்டும். பரிந்துரைகள் வேண்டாம். தகுதியான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுங்கள். வெற்றி வாய்ப்பு உறுதி என்றால் வசதியில்லாத வேட்பாளர்களின் தேவைகளைத் தலைமைக் கழகமே நிறைவு செய்யும்" என்று செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். இப்போது அவருக்கு ஆலோசனை கூறுவது சசிகலா அல்ல. தேர்தல்கலை தெரிந்த அறிவாளிகள், பத்திரிகையாளர்கள். அவர் கொடநாட்டில் குடி கொண்டிருக்கலாம். ஆனால், அவரது சிந்தனை தொகுதி தொகுதியாக வலம் வந்து கொண்டிருக்கிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகள் வாங்கிய 75 சட்டமன்றத் தொகுதிகளை தக்கவைத்துக் கொள்வது, குறைந்த வித்தியாசம் கண்ட 45 தொகுதிகளில் முழுமூச்சாகப் பணிசெய்வது என்று அவர் திட்டம் வகுத்துத் தந்திருக்கிறார். அடிக்கடி கழக முன்னணியினரை அழைத்து அல்லது தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது கருத்துகளைத் தெரிவிக்கிறார். அமைதியாகக் காய்கள் நகருகின்றன.

தி.மு.க.வின் கவனம் தேர்தல் களம் நோக்கித் திரும்புவதற்குள் அடிப்படைப் பணிகள் அனைத்தையும் செய்து முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக் கிறார். கூர்ந்து பார்த்தால் தேர்தல் பணியில் அ.தி.மு.கழகம் வெகுதூரம் முன்னேறியிருப்பது தெரியும். தேர்தலுக்கு இன்னும் ஏழு மாதங்கள்தானே என்பது அவருக்குத் தெரியாதா என்ன?




இலங்கை -இந்திய நட்புறவுச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 5பேருந்துகளை மக்களின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் பேருந்துக்கான திறப்பை சாரதிகளிடம் கையிப்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் பயணத்தை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-கரன்)

# போலியான அறிக்கையை சமர்ப்பித்து வேலைவாய்ப்பு பெற முயன்றவர் கைது

(கொழும்பு)

போலியான அறிக்கையை சமர்ப்பித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற முயற்சித்த எச்.ஐ.வி. தொற்றுநோய்க்குள்ளான பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடுவலப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதுடன் கைது செய்யப்பட்ட பெண் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ,ஹொங்கொங்கில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி 3 பெண்களிடம் இருந்து தலா ஒன்றரை இலட்சம் ரூபாவை மோசடி செய்த பெண் ஒருவர் ஹோமாகம பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணால் ஏமாற்றப்பட்ட மூன்று பேரில் ஒருவர் வேலைவாய்ப்புக்காக வட்டிக்குப் பணத்தைப் பெற்றுக்கொடுத்தவர் என்றும் இந்த நிலையில் அவருடைய கணவர் பணத்தைக் தொலைத்த கவலையில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இதற்கிடையில் கொழும்புக்கோட்டையில் இயங்கி வந்த போலியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன் போது 150இற்கும் மேற்பட்ட கடவுச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டதுன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஐ.நா.விஜயம் தொடர்பில் ஆளும் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தி

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மாநாட்டில் கலந்து கொண்ட குழு தொடர்பில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் முக்கியஸ்தர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்த விஜயத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டமைக்கு சிரேஷ்ட அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

உலகின் முதன்மையான அரச தலைவர் மாநாட்டில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி அழைத்துச் சென்ற குழாமில் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு அதிக சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறெனினும் சிரேஷ்ட அமைச்சர்கள் தமது எதிர்ப்பை ஜனாதிபதியிடம் நேரடியாக வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைக் குழாமில் ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா இணைக்கப்பட்ட காரணத்தினாலேயே அமைச்சர் டக்ளஸ் தேவான செய்துள்ளதாக குறித்த சிங்கள ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஸ்ரீரங்கா அமெரிக்கா செல்லும் இராஜதந்திரிகள் வரிசையில் இடம்பெற்றுள்ளமையை அறிந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தனது பயணத்தை வாபஸ் பெற்றுக் கொண்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# காதலனுடன் சென்ற சிறுமி நீதிமன்றின் பணிப்பின் பேரில் தாயிடம் ஒப்படைப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட வழக்கொன்றில் தன் சொந்த விருப்பத்தின் பேரில் காதலனுடன் சென்ற சிறுமி ஒருவர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் சிறுமியின் தாயிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் சிறுமி குறித்த இளைஞனுடன் காதலித்து காதலர் வீட்டில் வசித்து வந்ததாகவும் இது தொடர்பாக சிறுமியின் தாயாரினால் வல்வெட்டித்துறைப் பொலிஸில் கடந்த 2ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து இவ் வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் சிறுமியின் எதிர்காலம் கருதியும் கல்வி மற்றும் பெற்றோரின் பாதுகாப்பில் இருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாகவும் சிறுமி தாயிடம் செல்வதற்கு சம்மதம் தெரிவித்ததாலும் நீதவான் சிறுமியை தாயுடன் செல்ல அனுமதித்தார்.

காதலனும் சிறுமியும் இரண்டு வருடங்களுக்கும் எதுவிதமான தொடர்புகளையும் ஏற்படுத்தக்கூடாது எனவும் மீறி காதலனும் சிறுமியும் தொடர்புகளை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில் அபராதமாக தலா ஒரு இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

குழந்தையாய் மலர்ந்தது 04 . 05 . 1942



தெய்வமாய் மறைந்தது 03 . 09 . 2010

**அமரர் விநாயகமூர்த்தி குணபாலசிங்கம்(குணம்)**

இதயத்தில் அணையாத் தீபமாய் எரியும் எம் அன்பு ஐயா!
எப்படி ஐயா முடிந்தது உன்னால் எம்மை விட்டுச் செல்ல....
கனிந்த உன் முகமும் கண் கொள்ளாப் புன்னகையும்
காலனையும் கவர்ந்ததுவோ?....
ஐயோ எங்கு சென்றனையோ எம் ஆருயிர் ஐயாவே?....
அன்புச் செல்வங்கள் ஐவரும் ஐயா ஐயா என
கதறுவது காதில் விழவில்லையோ?....
ஐயா மாதமொன்று ஆனாலும் மறையாது உந்தன் நினைவுகள்

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நாளை 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை எம் அன்புத்தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் எரிஞ்சியம்மன் (தெணியம்மன்) கோவில் மடத்தில் காலை 7.00 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து மதியம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு.கு:- தயவு செய்து இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

எரிஞ்சியம்மன் கோவிலடி,
[தெணியம்மன்]
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

T.P:- 0771864194
0771728729

இங்ஙனம்
குடும்பத்தினர்

[2586]

தன்வினை தன்னைச்சுடும்;
ஓட்டப்பம் வீட்டைச்சுடும்.
–பட்டினத்தடிகள்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அன்று இறந்திருந்தால் தியாகி இன்றோ அவர் குற்றவாளி

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை என்னைச் சொல்லிக் குற்றமில்லை காலம் செய்த கோலமடி... கவிஞர் கண்ணதாசனின் இந்தப் பாடல் வரிகளை சரத் பொன்சேகா உச்சாடனம் செய்வதற்கு உகந்த நேரம் இது.

இந்த நாட்டின் இராணுவத் தளபதியாகவும் கூட்டுப்படைத் தளபதியாகவும் இருந்த சரத் பொன்சேகா தனது "ஜெனரல்" பதவியை அண்மையில் இழந்திருந்தார். இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்து இரண்டரை வருடங்கள் சிறை செல்கின்றார்.

இராணுவத் தளபதியாக இருந்தபோது அவர் மீது விடுதலைப்புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலில் சரத் பொன்சேகா மிக மோசமாகக் காயமடைந்திருந்தார்.

உயிர் பிழைப்பதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகவே இருந்தது. எனினும் மருத்துவர்கள் எடுத்த அயரா முயற்சியும் சரத் பொன்சேகாவைக் காப்பாற்ற வேண்டும் என்ற அரசின் கடும் பிரயத்தனமும் அவரை உயிர் மீட்டது.

புலிகளின் தாக்குதலில் தப்பிப்பிழைத்த சரத் பொன்சேகா, இனிமேல் நான் செய்து காட்டுகிறேன் என்று நினைத்திருப்பார்.

வன்னிப் போருக்குப் பின் யுத்தத்தை நடத்தி வெற்றி கொண்ட இராணுவத் தளபதியே வருக.. வருக.. என்று எங்கும் வரவேற்புபசாரம் இருக்கும் என அவர் எண்ணியிருப்பார்.

ஆனால் நடந்ததோ வேறு. தற்போது அவர் ஒரு குற்றவாளியாக இராணுவ நீதிமன்றத்தால் இனம் காணப்பட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புப் பிழை என்று கூறப்படுமாயின் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் இராணுவ நீதிமன்றங்கள் நடத்திய விசாரணைகளும் வழங்கிய தீர்ப்புக்களும் செல்லுபடி அற்றதாகிவிடும்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ இராணுவ நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஒப்புதல் அளித்துள்ளமையால், சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துபோவதுடன், இரண்டரை வருடங்கள் சிறைவாசத்தையும் அனுபவிக்கவுள்ளார்.

எப்படி இருக்கின்றது நிலைமை. விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சரத் பொன்சேகா உயிரிழக்க வேண்டியிருந்திருந்தால், அவர் இந்த நாட்டின் மாபெரும் தியாகியாக போற்றப்பட்டிருப்பார்.

வன்னி யுத்தம் முடிந்த கையோடு சரத் பொன்சேகாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை நடந்திருக்கும்.

சிலவேளை சரத் பொன்சேகாவின் வாழ்க்கைச் சரிதம் வரலாற்றுப் பாடப் புத்தகங்களிலும் இடம்பெற்றிருக்கலாம்.

ஆனால் அது நடக்கவில்லை. அது நடக்காததால் இன்று இது நடந்தது.

எதுஎன்றா கேட்கிறீர்கள்? "ஜெனரல்" பதவி பறிபோனது. நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இழக்கப்பட்டது. சிறைவாசம் மட்டுமே எஞ்சியது.

சரத் பொன்சேகா சிறையால் மீண்டு தேர்தலில் போட்டியிடுவதற்கு இறைவன் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுப்பாரா? பொறுத்திருந்து பார்ப்போம். இறைவனின் திருவிளையாட்டின் விளையாட்டை.

# சங்கடங்கள் தீர சனீஸ்வரனை வழிபடும் புரட்டாதிச் சனி விரதம்

வருடந் தோறும் புரட்டாதி மாதம் வந்ததும் மக்கள் புரட்டாதிச்சனி வழிபாடு பற்றியும், நவக்கிரகங்களில் ஒன்றான சனீஸ்வரன் தரும் துன்பங்களில் இருந்து நீங்கி நல்வாழ்வு வாழ வேண்டுமென விரதம் அனுட்டித்து ஆலயங்களுக்குச் சென்று சனிக்கிரகத்திற்கு எள்எண்ணெய் எரித்து, காகத்திற்கு முதலில் உணவு கொடுத்துப் பின்பே தாம் உணவு உண்பார்கள் என்பதும் வழமையாகும்.



புரட்டாதி மாதத்தில் பிதிர்வழிபாடு, சக்திவழிபாடு, என மாளய சிரார்த்தம், நவராத்திரி, கௌரி விரதாரம்பம் என்பன சிறப்பாக இருந்த போதிலும் சனீஸ்வரவழிபாடு என்பது தனித்துவமானதும், பயபக்தியுடன் கூடியதுமான சிறப்புடைய தாகும்.

காகத்தை வாகனமாகக் கொண்டசனீஸ்வர பகவான் சூரியனுக்கும், சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவன். சனிபிறந்ததனைக் கேள்விப்பட்ட சூரியபகவான் தனது தேர்ப்பாகன் சுதனுடன் சேர்ந்து சனீஸ்வரனைப் பார்க்க வந்தபோது முதலிற் சனியனின் பார்வை சூரியன் மேற்படவும் சூரியன் குஷ்டரோகியாகவும், தேர்ப்பாகன் சுதன் முடவனாகவும் நேரிட்டது, இதனாலே தான் சூரியனுக்கும் சனிக்கும் கிரக பலாபலன்களிலும் பிறவிப்பகை எனவும். சூரியன், சனி பார்வைகளும், சூரியதெசையிற் சனிபுத்தியும் கேடுவிளைவிக்கும் எனச் சோதிடவல்லுனர் கூறுவார்கள்.

சிவபக்தியிற் சிறந்தவனாக இருந்ததனாற்றான் சனீஸ்வரன் எனும் மற்றைய கிரகங்கட்கு இல்லாத ஈஸ்வரப்பதவி கிடைத்தது. கிரகங்கள்யாவும் மக்கட்கு நன்மை, தீமைகளை மாறி, மாறி வழங்குவன ஆயினும் சனீஸ்வரன்மட்டுமே மக்களின் நன்மை, தீமைகளைச் சீர்தூக்கிப்பார்த்து நன்றோ, தீதோ நடுநிலையாகப் பலாபலன்களை வழங்கிவிடுவார், இதனாற்றான் சனீஸ்வரனுக்கு எல்லோரும் மிகவும் பயப்படுகின்றார்கள் எனலாம்.

தெய்வங்களும் சரி, தேவர்களும்சரி, அரசனாயினும், ஆண்டியாயினும் எல்லோரையும் சனீஸ்வரன் ஆட்டிப் படைத்துவிடுவார்.

சனிபகவான் பீடித்ததனால் இராமர் கானகம் சென்றதும், இராவணன் சீதையைக்கவர்ந்ததும், அரிச்சந்திரன் மனைவி, மகனைப்பிரிந்ததும், இப்படியாகப் பலபுராணங்களிலும் சனீஸ்வரன் பீடித்ததனால் ஏற்பட்ட தொல்லைகள், எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

வழிபாட்டுச்சிறப்பு

**நீர்வைமணி**

சனீஸ்வரன் விஸ்வகர்மாவின் மகளைத் திருமணம் செய்தும், அவளைப் புறக்கணித்து உதாசீனம் செய்ததால் கோபங்கொண்ட அவள் சனீஸ்வரன் பார்க்கும் பொருட்கள் கருகிவிடவேண்டுமெனச்சபித்தாள். இந்தச்சாபம்நீங்க. வேண்டுமெனசனிபகவான் சிவபெருமானை வேண்டுதல் செய்யவும், குருபார்வையினாலும், சூரியவழிபாட்டினாலும் விமோசனம் கிடைக்குமென இறைவன் அருளினார்.

இதனாற்றான் சனிதோஷமுற்றவர்கள் சிவவழிபாட்டிலும், நந்திதேவருக்கு நீர்வார்த்துக் குளிரச் செய்தும், சூரிய பகவானை வழிபட்டும், குருபகவானை வழிபட்டும் தத்தம் துன்பங்கள் நீங்க நிவர்த்தி தேடிக் கொள்கின்றனர் மேலும் சனிதோஷ முடையவர்கள் சனிக்கிழமைகளில் எண்ணை முழுக் காடுவதும். மகாவிஷ்ணு, ஆஞ்சநேயர் வழிபாடு செய்தலும். தான்தனியே உண்ணாது தன்சுற்றத்தைக் கூவியழைத்து ஒன்றுகூடி உண்ணும் காக்கைகளைக் கூப்பிட்டு அவற்றிற்கு முதலில் உணவுகொடுத்துவிட்டுப் பின் தாம் உணவு உட்கொண்டு விரதம் அனுட்டிப்பதும் சனிக்கிரக வழிபாட்டின் சிறப்பெனலாம்.

# யாழ். அபிவிருத்தித் திட்டங்களுக்காக 249.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

## வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதற்கென 249.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்ந்த குடும்பங்களுக்குரிய அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் (ENREP) ஏற்கனவே செயற்படுத்தி வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு மேலதிகமாக, கடந்த 15.09.2010 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷவிடம் அரச அதிபரால் முன்வைக்கப்பட்ட வேலைத் திட்டங்களை வடக்கின் துரித மீட்சித் திட்டத்தினூடாக மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடுகள் அனுமதிக்கப்பட்டு அவ் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சந்தைக்கட்டடம் (இரண்டாம் கட்டம்) அமைத்தலுக்கு 50 மில்லியனும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மக்களது குடிநீர் தேவையை நிறைவுசெய்ய 25 மில்லியனும், புங்குடுதீவு கமநல அபிவிருத்தி நிலையம் அமைப்பதற்கு 05 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகள் புனரமைப்பு 15 மில், வலி. வடக்கு பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகள் புனரமைப்பு 17.50 மில், புலோலி (மருதங்கேணி) பிரதேச சபையின் கீழ் உள்ள வீதிகள் புனரமைப்பு 65 மில், வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) கல்விக் கோட்டத்தின் 14 பாடசாலைகள் புனரமைப்பு 35 மில், புங்குடுதீவில் உவர் நீர் தடுப்பு அணைகட்டுதல் 15 மில், பல நோக்குக் கூட்டறவுச் சங்கங்களின் புனரமைப்பு (மருதங்கேணி, தெல்லிப்பழை) 22 மில்லியனும் என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வேலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அதற்குரிய திணைக்களத் தலைவர்களை கேட்டுக்கொள்வதுடன் இவ் வேலைத் திட்டங்களை உரிய காலத்தில் நிறைவுசெய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கையளிக்குமாறும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார். (ச)

# மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி

(கரவெட்டி)

வடமராட்சி இன்பர்சிட்டி கடல் பரப்பில் மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அ.மரியவிக்சன் (வயது 34) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற் கொண்ட பருத்தித்துறை பதில் நீதிவான் கே. சுப்பிரமணியம், பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச–6,24)


# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



நீ தான் இந்த பிரபஞ்சம் போற்றும் தனி இறைவன். இன்று உள்ளவை. இனி உண்டாகவிருப்பவை ஆகிய எல்லாவற்றிற்கும் தனி இறைவன் நீயே. சூரியர்கள், சந்திரர்கள், நட்சத்திரங்கள், பூமிகள், கிரகங்கள் மற்றும் இந்த பிரபஞ்சத்திலுள்ள மிகச்சிறிய பொருட்கள் எல்லா வற்றிற்கும் தனி இறைவன் நீயே!

சூரியன் ஒளி வீசுவதற்கும், நட்சத்திரங்கள் மின்னுவதற்கும், பூமி வளமும், அழகும் பெற்று விளங்குவதற்கும் காரணம் நீயே. உனது அருளால் தான் எல்லாம் ஒன்றோடொன்று அன்புடனும் கவர்ச்சியுடனும் இருக்கின்றன. எல்லாவற்றுள்ளும் நீயே இருக்கிறாய். எல்லாம் நீயே. யாரை ஒதுக்குவது? யாரை ஏற்றுக்கொள்வது? எல்லாவற்றிலும் உள்ள எல்லாமும் நீயே தான். இந்த ஞானம் உதித்தவுடன் மாயை தானாகவே விலகிவிடுகிறது.





அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் மாதகல் சென்.தோமஸ் பெண்கள் பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வகுப்பறை கட்டட திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் அமைக்கப்பட்ட கட்டடத்தினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் திறந்துவைப்பதனையும் அருகில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யோ. எழிலரசி, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் போராசிரியர் ப.சிவநாதன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி மற்றும் மாதகல் பங்குத்தந்தை வண.ஆனந்தகுமார் அடிகளார் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மாதகல் செய்தியாளர்)

## பாடசாலைகளுக்கிடையிலான போட்டித் தன்மையை

## பெற்றோர்களே உருவாக்குகின்றனர்

### கல்வியமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

பாடசாலைகளுக்கிடையேயான போட்டித் தன்மையை பெற்றோரே உருவாக்குவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் சந்தர்ப் பத்தினையும் பெற்றோர் பறித்துக்கொள் வதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மொனராகலை மன்னம்பிட்டிய பகுதியில் நேற்று நடைபெற்ற சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சர்வதேச அரங்கிற்குச் செல்லும் வீர வீராங்கனைகள் பாடசாலைகளிலிருந்து உருவாகின்றதாகக் குறிப்பிட்ட அமைச்சர் தற்போதைய பெற்றோர் இணைப்பாட விதான செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதில்லை எனத் தெரி வித்தார்.

மாணவர்களை விளையாட்டுக்களில் பங்கேற்பதற் கோ அல்லது நடன சங்கீத நிகழ்வில் பங்கேற்பதற்கோ பெற்றோர் அனுமதிப்பதில்லை எனவும் பரீட்சைகள் மாத்திரமே மாணவர்களுக்கு மிகவும் முக்கியமானதென அவர்கள் கருதுவதாக குறிப்பிட்டார்.

வசதியுடைய பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பிரசித்திபெற்ற பாடசாலைகளிலேயே அனுமதி வழங்குமாறு கோருகின்ற தாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கையில் 42 பிரசித்தி பெற்ற பாடசாலைகள் மாத்திரமே இருப்பதாகவும் ஏனைய ஆயிரக்கணக்கான பாட சாலைகள் சாதாரண பாடசாலைகள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## பொன்சேகா மன்னிப்புக் கோரமாட்டார்; ஜனநாயக தேசிய முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதியிடம் மன்னிப்பளிக்குமாறு கோரமாட்டார் என ஜனநாயக தேசிய முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட 30 மாத சிறைத்தண்டனையை ஜனாதிபதி அங்கீகாரத்தையடுத்து சரத் பொன்சேகா நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் பொன்சேகா கோரினால் ஜனாதிபதி இத்தீர்ப்பை மீள்பரிசீலனை செய்வார் என செய்தி வெளியாகியமை தொடர்பாக கேட்டபோதே விஜித ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

பொன்சேகா அப்பாவி எனவும் அவருக்கு எதிரான நடவடிக்கை அரசியல் பழிவாங்கலே என்றும் அவர் தெரிவித்தார்.

பொன்சேகாவின் விடுதலைக்கு நாடு முழுவதிலுமுள்ள பொதுமக்களின் ஆதரவு திரட்டப்படும் எனவும் பொது நீதிமன்றம் மூலம் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கும்பாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் (குதிரேசன் கோயில்) திருக்குடமுழுக்கு, மகாகும்பாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி வள்ளி, தெய்வயானை சமேத செந்தில் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் மாலை 6 மணிக்கு அலங்கார உற்சவமும் வெளிவீதி உலா வருதலும் இடம்பெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவன உத்தியோகத்தர்கள், மானிப்பாய் பரீஸ் லயன்ஸ் கழக அனுசரணையுடன் இரத்த தான நிகழ்வு ஒன்றை இன்று காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் வைத்து நடாத்தவுள்ளனர்.

இதில் இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு யாழ்.யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ஏன்.சுகுணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வவுனியா மரதன்குளம் பகுதியில் கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வவுனியா ஆசிக்குளம் வீதியிலுள்ள மரதன் குளம் பகுதியில் 7 கிலோ கிராம் எடையுடைய 2 கிளைமோர் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இறம்பைக் குளம் பகுதியிலுள்ள நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தம்பலகமுவ வம்பேவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது மரமொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 39 ரெற்றினிக் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக் குண்டுகள் ரி-56 துப்பாக்கிகள், குண்டுகள் உட்பட பல உபகரணங்கள் கண்டுபிடிக்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கல்முனைப் பகுதியிலிருந்து ரி-56 துப்பாக்கி மற்றும் ஆயிரத்து 720 துப்பாக்கி ரவைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இவை கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

## யுத்தம் காரணமாக விதவைகளானோருக்கு இந்திய உதவியுடன் புனர்வாழ்வுத் திட்டம்

### அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த கால யுத்தத்தால் விதவைகளான பெண்களுக்கு இந்தியாவின் உதவியுடன் புனர்வாழ்வு வழங்க அரசு முன்வந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் விதவைகளான பெண்களுக்கு புனர்வாழ்வு வழங்க இந்தியா உதவி செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்தியா இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. இரு தரப்பினருக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிலையில் இவ் விதவைகளின் நிலையை நேரில் பார்வையிடுவதற்காக இந்திய உயர்மட்டக் குழு ஒன்று விரைவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்ய உள்ளது.

இவ் விதவைகளுக்கு சுயதொழில் வழங்குதல் மூலம் வாழ்வாதாரத்துக்கு வழி செய்வதே புனர்வாழ்வுத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒட்டுமொத்தமாக 89 ஆயிரம் விதவைகள் வரை உள்ளார்கள். (ஸ்ரீ-2)


## சட்டவிரோதமாக பிரிட்டனில் தங்கிய இலங்கைத் தமிழர்கள் கைது

(கொழும்பு)

பிரித்தானியாவின் சூசெக்ஸ் நகரில் உள்ள இருபது இடங்களில் நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட மாபெரும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை ஒன்றின் போது சட்டவிரோத குடியேற்றவாசிகள் என்கிற சந்தேகத்தில் 25 பேர் வரை கைது செய்யப் பட்டுள்ளார்கள்.

இவர்களில் அநேகர் இலங்கைத் தமிழர்கள் ஆவர். இச் சுற்றிவளைப்புத் தேடுதல்நடவடிக்கையை UK Border Agency மற்றும் பொலிஸ் ஆகியன இணைந்து நடத்தின. சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு உதவி, ஒத்தாசை வழங்கினர் என்கிற சந்தேகத்தில் கூட இரு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். (ஸ்ரீ-2)

# வோட்ஷன் அற்புதமான சதம் சரிவிலிருந்து மீண்டது ஆஸி



(மொகாலி)

வோட்ஷன், பொன்டிங்கின் சிறப்பான இணைப்பாட்டத்தி மூலம் அவுஸ்திரேலிய அணி கௌரவமான இலக்கை அடைந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று மொகாலியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்திலேயே அதிர்ச்சியடைந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹட்டிச் 6 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 13 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது.

அடுத்துக் களமிறங்கிய அணித்தலைவர் பொன்டிங் திறமையாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் நேற்றைய முதல் நாள் ஆட்ட மதிய போசன இடைவேளையின்போது அவுஸ்திரேலிய அணி ஒரு விக்கெட்டையிழந்து 107 ஓட்டங்களை எட்டியது.

தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணிக்கு அணித்தலைவர் பொன்டிங் 88 பந்துகளில் அரைச்சதம் கடந்து சிறப்பித்தார்.

மறுமுனையில் ஷேன் வோட்ஷன் 103 பந்துகளில் அரைச்சதம் கடக்க அவுஸ்திரேலிய அணி 150 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் 124 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 71 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய மைக்கல் கிளார்க் 14 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஹர்பஜன் சிங் பந்துவீச்சில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து நீண்டநேரம் நிலைக்கவில்லை.

தொடர்ந்து வந்த மைக்கல் ஹசி நிதானமாகத் துடுப்பொடுத்தாடிய போதும் 17 ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய நோர்த்து பூச்சியத்துடன் சகீர்கானின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் முறையில் ஆட்டமிழந்து வந்த வேகத்திலேயே அரங்கு திரும்பினார்.

அடுத்து பெய்ன் களமிறங்க மறுமுனையில் ஆரம்பம் முதலே சிறப்பாக துடுப்பெடுத்தாடிய வோட்ஷன் தனது 2 ஆவது டெஸ்ட் சதமடித்து அசத்தினார்.

இந்நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிபில் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களையிழந்து 224 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வோட்ஷன் 279 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 101 ஓட்டங்களையும் பெய்ன் ஒரு ஓட்டத்தையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான் 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் எடுத்தனர்.

இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

### சகீர் - பொண்டிங் வாக்குவாதம்

நேற்று முதல்நாள் ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணித்தலைவர் பொண்டிங் இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஹர்பஜன் வீசிய ஆட்டத்தின் 42 ஆவது ஓவரில் 4 வது பந்தை எதிர்கொண்ட வோட்ஷன் ஒரு ஓட்டமெடுக்க விரும்பிய பொண்டிங்கை அழைத்தார். அப்போது 71 ஓட்டம் எடுத்திருந்த பொண்டிங், ரெய்னாவின் துல்லிய த்ரோவில் ரன்-அவுட் ஆனார்.

இந்நிலையில் அரங்கு திரும்பிய பொண்டிங்கை நோக்கி இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் ஏதோ கூறினார். பதிலுக்கு பொண்டிங்கும் ஏதோ கூற வாக்குவாதம் ஏற்பட்டது.அப்போது நடுவர் பில்லி பவுடன் தலையிட்டு சமாதானம் செய்து வைத்தார். முதல் நாள் ஆட்டம் முடிந்த பின் போட்டி நடுவர் கிறிஸ் பிராட், சகீர்கானை எச்சரித்தார்.



நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த பொண்டிங் இத்தொடரில் இந்திய வீரர்களிடம் எவ்வித வாக்குவாதத்தில் ஈடுபடக்கூடாது என சகவீரர்களிடம் தெரிவித்துள்ளதாகக் கூறினார். இந்நிலையில் இவரே வாக்குவாதத்தில் ஈடுபட்டது வருத்தமானவிடயம்.

### வீணான பிடி வாய்ப்பு

நேற்றைய முதல் நாள் ஆட்டம் அவுஸ்திரேலியாவின் வோட்சனுக்கு ராசியானதாக அமைந்தது. இவர் கொடுத்த இரண்டு சுலப பிடி வாய்ப்பை இந்திய வீரர்கள் வீணடித்தனர். இவர் ஓட்டம் எதுவும் எடுக்காதபோது சகீர் பந்தில் கொடுத்த பிடியை சேவாக் கோட்டை விட்டார். பின்னர் இவர் 37 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பிரக்யான்ஓயா பந்தில் கொடுத்த பிடியை விக்கெட் காப்பாளர் தோனி கோட்டைவிட்டார். இதனை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட வோட்ஷன் டெஸ்ட் அரங்கில் தனது 2 ஆவது சதமடித்தார்

### இஷாந்த் காயம்

நேற்றைய ஆட்டத்தில் இந்திய வேகப் பந்து வீச்சாளர் இஷாந் சர்மா தனது 8 ஆவது ஓவரை வீசும் பொழுது முழங்கால் காயத்தால் அவதிப்பட்டர்.இதனால் இவர் நான்கு பந்துகள் மட்டும் வீசிய நிலையில் பெவிலியன் திரும்பினார். அந்த ஓவரில் மீதமுள்ள இரண்டு பந்தை சேவாக் வீசினார். நேற்று 7.4 ஓவர் வீசிய இஷாந்த் விக்கெட் எதுவும் கைப்பற்றாமல் 49ஓட்டங்கள் கொடுத்தார்.

# ஆறு வருடங்களின் பின் வருகிறார் கிராண்ட் பிளவர்




(ஹராரே)

சிம்பாவே அணியின் முன்னாள் வீரர் கிராண்ட் பிளவர் 6 வருடங்களுக்குப் பின் மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் விளையாடவுள்ளார்.

சிம்பாவே அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராக வலம் வந்தவர் கிராண்ட் பிளவர். இவர் 67 டெஸ்ட் போட்டியில் 3457 ஓட்டங்களையும், 219 ஒருநாள் போட்டியில் 6536 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வு பெற்ற இவர் 6 ஆண்டுகளாக உள்ளூர் அணியான எசக்ஸ் சார்பில் விளையாடிவந்தார். 39 வயதாகும் இவர் தற்போது சிம்பாவே அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக உள்ளார்.

இந்நிலையில் இம்மாதம் தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் செல்லவுள்ள சிம்பாவே அணி சார்பில் போட்டியில் கிராண்ட் பிளவர் விளையாட உள்ளார்.

இவரது சகோதரர் அன்டி பிளவர் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.











கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு சிறுமி ஒருவர் மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும், விருந்தினர்களையும், சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொண்ட விவசாய பிரதி அமைச்சர் சந்திரசேன, ஜனாதிபதி செயலக சமூக அபிவிருத்திப் பணிப்பாளர் நந்தன விஜயசிங்க, ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோர் சிறுவர்களுடன் காணப்படுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள் என்.குமார்)

## தேசிய மட்ட தடகளப் போட்டி...

மூன்றாவது தங்கப் பதக்கத்தை வென்றது.

அத்துடன் வெள்ளிப் பதக்கம் ஒன்றும் பெற்றுள்ளது. இதேவேளை நேற்று நடைபெற்ற தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீரர் வி.ஹரிகரன் 36.90 மீற்றர் தூரம் எறிந்து முதலாம் இடத்தைப் பிடித்துத் தங்கப் பதக்கத்தை வென்றார்.

அத்துடன் இவரின் சிறந்த வெளிப்படுத்தலுக்கு வர்ண விருதும் வழங்கப்பட்டது. இதனை விட நேற்று நடைபெற்ற 17 வயதுப் பெண்கள் பிரிவு குண்டெறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வீராங்கனை ஆர்.தர்ஷிகா 9.37 மீற்றர் தூரம் எறிந்து மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கல விருதை வென்றார்.

அத்துடன் 19 வயது ஆண்கள் பிரிவு 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் ஜோ.எரிக் பிரதாப் வர்ண விருது பெற்றார்.

இதன் மூலம் தேசிய மட்ட தடகளப் போட்டிகளில் வட மாகாண வீர வீராங்கனைகள் நேற்று வரை 5 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் மற்றும் 2 வர்ண விருதுகளை வென்றுள்ளனர். (ச-5)

## ஆயுதங்களினால் ஆட்சி செய்ய...

நாட்டில் சட்ட ஒழுங்கின் மீ து நம்பிக்கை வைக்க முடியாதளவுக்கு அரசாங்கத்தின் சர்வாதிகாரம் மேலோங்கியுள்ளது. ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கோரினால் சரத் பொன்சேகாவுக்கு விடுதலை வழங்குவது குறித்து ஆலோசிப்பதாகப் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்திருந்தார். இது வேடிக்கையாக வேயுள்ளது.

10-12 ஆண்டுகள் அமெரிக்காவில் வசித்து வந்தவர்களுக்கு எமது நாட்டைப் பற்றி என்ன தெரியும்? ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம் செய்ததற்காகவே சரத் பொன்சேகாவைச் சிறையில் இட்டுள்ளோம் என அரசாங்கம் கூறுமேயானால் சரத் பொன்சேகாவை விடுதலை செய்து, 8 ஜே.வி.பியினரை கைது செய்து சிறையிட வேண்டும்.

வைராக்கியம் பிடித்த அரசாங்கம் விரைவில் வேரோடு அழியப் போகின்றது. அரசாங்கத்தினால் சரத் பொன்சேகாவுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானத்தை மக்கள் மாற்றியமைப்பார்க்ள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை இந்தத் தீர்ப்பின் மூலம் ஜனாதிபதியினால் எதுவும் ஈட்டப்படவில்லை. மக்களின் அதிருப்தியை மட்டுமே சம்பாதித்துள்ளதாகவும் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் பௌத்த தரிசனம் பற்றி உரையாற்றிய ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் தனது எதிராளியைப் பழிவாங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொய் மற்றும் குரோதம் பற்றி பௌத்த மத கொள்கைகளில் குறிப்பிடப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## மன்னிப்புக் கோர வேண்டுமா?...

இவ்வாறு தெரிவித்தார்.

மேன்முறையீடு என்பதால் கருதப்படுவது யாது என தெளிவாக அவர் கூற வேண்டும் என நேற்று மாலை தனது கணவரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் பார்த்துவிட்டு வந்து ஊடகவியலாளர்களுடன் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் தேசிய உடையை கையில் வைத்திருந்த அவர், எனது கணவரின் ஞாபகமாக இது மட்டுமே தற்போது உள்ளது என கண்ணீர் மல்கக் கூறினார்.

சரத் பொன்சேகாவை அரசியல் கைதிகளை வைத்திருக்கும் கூடத்தில் வைத்துள்ளனர். அவரது கூடம் நுளம்பு நிறைந்ததாக உள்ளது.

படுப்பதற்கு கன்வஸ் பாய் மட்டுமேயுள்ளது. ஏனைய கைதிகள் போன்று இவருக்கு ஒரு எண் வழங்கப்பட்டதா எனக் கேட்கப்பட்டபோது தனக்கு அது தெரியாது என்றார் அவர்.

ஒரு போர்வை, இரண்டு துவாய்கள், ஒரு தலையணை உறை என்பவற்றை அனோமா தனது கணவருக்கு வழங்க அனுமதிக்கப்பட்ட சில பொருள்களில் அடங்கும் என தெரிய வருகின்றது.

நாட்டைப் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து பாதுகாத்த எனது கணவருக்கு வெகுமதி கிடைத்துள்ளது. எனது கணவரை இப்படி நடத்தும் அளவுக்குக் கொடுமைக்காரராக ஒருவர் இருக்க முடியும் என என்னால் கற்பனையில் கூட நினைக்க முடியவில்லை என அவர் தெரிவித்தார். (ச-5)

## கோரிக்கை முன்...

இது தொடர்பில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

இராணுவ நீதிமன்றத்தின் மூலம் எவரையும் பழிவாங்கும் எண்ணம்எதுவும் எனக்கில்லை. இதற்கு முன்னரும் இராணுவத்திலிருந்து தப்பியோடிய குற்றச்சாட்டுக்காக சுமார் 8 ஆயிரம் பேர்வரையில் இராணுவ நீதிமன்றில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அதனால் இராணுவ நீதிமன்றம் ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. என்னால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை நாட்டின் அரச படைகளின் தலைவர் என்ற ரீதியில் நான் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஆனால் அரசியல் அமைப்பின் விதிகளின்படி ஜனாதிபதி என்ற ரீதியில் இந்த தண்டனை குறித்து மீள் பரிசீலனை செய்யும் அதிகாரம் தமக்குள்ளதாகக் கூறிய ஜனாதிபதி, ஆனால் அதற்கான கோரிக்கை முறைப்படி முன்வைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ச-5,6)

# சமுர்த்தி அலுவலரின் 2 சைக்கிள்கள் பறிபோயின

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பெண் சமுர்த்தி அலுவலர் ஒருவரின் இரண்டு துவிச்சக்கர வண்டிகள் பிரதேச செயலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை காணாமல் போயுள்ளன.

வேலணை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய பிரஸ்தாப பெண் சமுர்த்தி அலுவலர் அண்மையில் இடமாற்றம் பெற்று நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்றார்.

அவர் கடமைக்குச் சென்று ஒருசில தினங்களில் அவரின் துவிச்சக்கர வண்டி காணாமல் போயிருந்தது.

அதன் பின்னர் நேற்றைய தினம் அவரின் புத்தம் புதிய துவிச்சக்கர வண்டியும் பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை காணாமல் போயுள்ளது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## இறுதிப்...

கான ஆதாரம் என்று சுமார் 4 மாதங்களுக்கு முன் புகைப்படங்கள் சிலவற்றை அந்த அமைப்பு வெளிப்படுத்தியிருந்தது. தற்போது அதே இளைஞன் இராணுவத் தினரால் கட்டி வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட வீடியோக்காட்சியொன்று ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் சிங்களத்திலான உரையாடல் கேட்பதாக அவ் அமைப்பு தெரிவித்துள்ளது(ச-5)

## தமிழீழ...

ரீதியில் அழிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் சர்வதேச வலையமைப்புப் பாதிக்கப்படாமல் இருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார். (ச-5)


**Obtain International recognized IT certification courses in Jaffna now!**

CCENT- Cisco certified Entry Networking Technician
2007 ஆம் ஆண்டு Cisco நிறுவனமானது CCENT எனும் புதியதொரு Certification ஐப் பூர்த்தி செய்தவர்களை சிறந்தவகையில் routers, switches போன்றவற்றை instal, operate, and troubleshoot செய்யக் கூடியவர்களாகக் கணிக்கின்றது. CCENT certification ஆனது புகழ்பெற்ற CCNA certificationனின் முதற்படி நிலையாகும். CCNA யின் அடுத்த படிநிலை CCNP ஆகும்.

Take ICND1 (640-822)Exam → Pass → CCENT Certified → Take ICND2 (640-822)Exam → Pass → CCENT Certified
Take ICND (640-822)Exam → Pass → CCENT Certified

SCJP-The Sun Certified Java Programmer
SCJP ஆனது உலகத்தினால் அங்கிகரிக்கப்பட்ட Java and Programming concepts சிறந்தவகையில் தெரிந்தவர்களாக உலகம் கணிக்கின்றது

Target audiences
After A/L, who want to be in IT field,
IT Degree followers,
If you want to succeed as a technical / programmer person in the IT industry,
Who want to select IT as their career

CCENT - Batch 2 - 26.09.2010 - (Sun) 8.30 am
CCENT - Batch 3 - 02.10.2010 - (Sat) 8.30 am
SCJP - Batch 2 - 02.10.2010 - (Sat) 12.30 pm

Register Yourself now!

AIMS
(Academic Institute of Modern Systems)
383/14, Temple Road, Nallur Tel: 021 222 1553
Center For FOSS & LAMP



**கண்ணீர் அஞ்சலி**

பிறப்பு 17 11 1931



இறப்பு 28 09 2010

**அமரர் திருவாளர் வி.இராமநாதன்**

ஊரதீவின் மைந்தனும் பிரபல தொழில் அதிபரும் மடத்துவெளி பாலசுப்பிரமணிய சுவாமிகள் தேவஸ்தான அறங்காவலரும், எமது பாடசாலையின் அபிவிருத்திக்கு முக்கிய பங்காற்றிய பழைய மாணவரும், சமூக சேவையாளனுமாகிய அமரர் திருவாளர் வி.இராமநாதன் அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மடத்துவெளி பாலசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், மடத்துவெளி.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்.

(சி/1325)



**NEW SCIENCE HALL JAFFNA**

G.C.E. (A/L) இணைந்த கணிதம்

MR.S. பிரேம்நாத் B.Sc

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| பிரிவு | நேரம் | பாடப்பரப்பு |
|---|---|---|
| 2011 | 12.30 - 2.00 | வரிசை மாற்றமும் சேர்மானமும் |
| 2012 | 11.00 - 12.30 | தொடர்பு வேகம் |
| மீட்டல் பிரிவு பரீட்சைக்கு தோற்றிய வர்கட்குரியது. | 8.00 - 11.00 | அலகுரீதியில் முழுப்பாடப்பரப்புக் குரிய துரித மீட்டல் வினாவிடை வகுப்பு. |

ஆரம்பம் : 02.10.2010 (சனி)

குறிப்பு ★ மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ குறித்தவொரு பாடப்பரப்பு ஆரம்பித்த பின்னர் அது முடியும் வரை இடைநடுவில் புதிய அனுமதி வழங்கப்படமாட்டாது.

(C-1322)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.